என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

வீர மங்கைக்கு அஞ்சலி

March 2016 FREE ISSUE


# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2047
மாசி
மலர் : 13
இதழ் : 154
மார்ச் - 2016



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


நல்ல சோறு சாப்பிட AMIRTAA அரிசி வாங்குங்கள்

UNLEASH
THE POWER OF GOLD
THARANI
JEWELLERY & PAWNBROKERS
STARTING FROM 2.95% PER MONTH
GOLD LOANS
THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month. It's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest
£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time we will keep the pledged Gold. If you have borrowed more than £75 We are entitled to sell your pledge to cover the outstandings The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!



அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம் வழங்கும்
திருக்குறள் போட்டி
தினம் ஒரு திருக்குறள், 365 தெரிவு செய்யப்பட்ட
குறள்கள் மனப்பாடம் செய்து தமிழர் தகவல் மூலம்
தெரியப்படுத்தினால் -
சிறப்பு பரிசாக
முதல் பரிசு
பவுன் 200.00
இரண்டாம் பரிசு
பவுன் 100.00
மூன்றாம் பரிசு
பவுன் 50.00
365 அடங்கிய
திருக்குறள் புத்தகத்தை போட்டியில்
கலந்து கொள்பவர்கள்
இலவசமாக
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு: தமிழர் தகவல்
லண்டன்




லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA




நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்


வீரத்தமிழ்ப்பெண்
மங்கையர்க்கரசி
இறுதி மரியாதை நிகழ்வு



என் தந்தையாரைக் கரம் பிடித்து அவருடன் இல்வாழ்க்கையிலும் அரசியலிலும் 35 வருடங்கள் அவரின் இன்பத்திலும் துன்பத்திலும் உடனிருந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

தந்தை செல்வா அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு வீ ஏ கந்தையா, பட்டிருப்புத் தந்த பெருமகன் இராசமாணிக்கம் போன்றவர்களால் வளர்க்கப்பட்டு, முதலில் தமிழரசுக் கட்சி மேடைகளிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளிலும் உங்கள் பாட்டாலும் பேச்சாலும் உங்களுக்கென்று ஒரு தனி முத்திரை பதித்த என் அன்னையே! சென்றுவாருங்கள்.

Ph : 95431-2415633
Cell : 94430-90340
94426-58534



ஆய்வுரைத்திலகம். அ. அறிவொளி, M.A., Ph.D.,
14, ஜெ. ஹனிஃபா காலனி, திருச்சி - 620 020.

இலக்கியம், சாக்தம், இயற்கை மருத்துவம், காந்த மருத்துவம்,
சித்தா, அக்குபஞ்சர், ஓமியோபதி, தத்துவம், யோகம்.

உ

ஓம் ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரியின் திருவருளே நிறைக

வாக்கிய பஞ்சாங்கம் என்பது முனிவர்கள் ஞானத்தால் கிரகங்களின் அமைப்பை உணர்ந்து பலாபலன்கள் சொல்லியதாகும்.

கணிதம் பிழைத்தாலும் முனிவர்களின் ஆசி ஒருபோதும் பிழைக்காது. ஆகையினால் வாக்கியத்தின் படி சுபகாரியங்கள் செய்வது உரிய பலனை தரும். ஆதலால் கோவில் திருவிழாக்கள் பெரியோர் வாக்கின்படியே பழங்காலம் தொட்டு நடந்து வருகின்றது.

வாக்கியத்திற்கும் திருக்கணிதத்திற்கும் 12 பாகைதான் வித்தியாசம். வழிபாட்டிற்கு உரிய பஞ்சாங்கம் வாக்கியமே.

இவண்
[illegible]
21. 3. 2016

தொண்டு என்னும் தோளுடைமை உண்டாயின் நாம்பிறந்தது
உண்டு என்று சொல்லும் உலகு

# சைவ மக்கள் சைவத்திற்கு கேடு நினைக்கலாமா?

எத்தனை முறை சொன்னாலும், எந்த வகையில் சொன்னாலும் கேட்பதில்லை என்கின்ற முடிவோடு பலரும் இருப்பதாகவே தெரிகிறது. பரவாயில்லை, என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்கிணங்க, என் உடலில் சக்தி இருக்கும் நாள்வரை, சைவத்தின் நெறிமுறைகளைப் பற்றியும், அவை மீறப்படுவது குறித்த என் கவலையையும் நான் வெளிப்படுத்திக் கொண்டுதான் இருப்பேன். நான் விதைகளைத் தூவுகின்றேன். நல்ல நிலத்தில் விழுபவை முளைக்கட்டும்!

தெருவுக்குத் தெரு இருக்கின்ற மரத்தடிகளில் எல்லாம் எத்தனை கோயில்கள் வேண்டுமானாலும் முளைக்கலாம்... அவற்றில் பூசைகளும், விழாக்களும் அவரவர் தனிப்பட்ட வசதிகளுக்கேற்ப நடத்தப்படலாம்... ஆனால் சைவப் பெருமக்களைப் பொறுத்தவரை, பாடல் பெற்ற தலங்களில், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றப்படும் வாக்கியப்பஞ் சாங்கத்தின் படிதான், அனைத்தும் நடைபெற வேண்டும்... தமிழ்நாட்டில் உள்ள நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு சைவக் கோவில்களில் இப்படித்தான் நடக்கிறது.

லண்டனில் இந்தாண்டு பங்குனி உத்திரம், ஈலிங் கனக துர்க்கை கோயிலில் ஈஸ்ட்ஹாம் முருகன் கோயில் ஆகியவற்றில், 23ஆம் தேதி கொண்டாடப்பட்டது. ஆனால் அதே நேரத்தில், மற்ற கோயில்களில் 22ஆம் தேதியே கொண்டாடி முடித்துவிட்டனர். தமிழ்நாட்டில் உள்ள பாடல்பெற்ற தலமான, பழனியில் 23ஆம் தேதிதான் பங்குனி உத்திரம் கொண்டாடப்பட்டது. அப்படியிருக்க, மற்ற கோயில்கள் 22இல் கொண்டாடியது எப்படி? எந்த அடிப்படையில்?

பங்குனி உத்திரத்தை 23ஆம் தேதி கொண்டாடியவர்களுக்கு மட்டும்தான் அதற்குரிய பலன் கிடைக்கும். அதைவிட்டு, இஷ்டத்திற்குக் கொண்டாடினால், எப்படி பலனை அடையமுடியும்? இதையெல்லாம் தெரிந்துதான் செய்கிறார்களா... இல்லை அறியாமல் செய்கிறார்களா? கண்டிப்பாக அறியாமல் செய்ய வாய்ப்பில்லை... காரணம், இதுபோன்று அவர்கள் செய்யும் தவறுகளை ஒவ்வொரு முறையும் தவறாமல், தமிழர் தகவல் சுட்டிக்காட்டிக் கொண்டேதான் வருகிறது. சரியான வழிமுறைகளையும் சைவப் பெரியோர்களிடம் கேட்டு, எடுத்துரைத்து வருகிறது. இருந்தும், நீ என்ன சொல்வது நான் என்ன கேட்பது என்ற போக்கையே அவர்களிடம் பார்க்க முடிகிறது. இது, தனிப்பட்ட முறையில் மட்டும்மின்றி, சைவ மக்களின் எதிர்காலத்திற்கும் கேடு விளைவிக்கும் என்பதை, சம்பந்தப்பட்டவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தனி வாழ்க்கையில் எப்படி வேண்டுமானாலும் முடிவுகள் எடுக்கலாம். ஆனால் பொது வாழ்க்கைக்கு என்று வந்துவிட்டால், சமூகத்தின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும்.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று, மரபுகளை மீறி காரியமாற்றுவது, சைவத்தை வளர்க்க தம் வாழ்வையே அர்ப்பணித்த பெரியோர்களுக்குச் செய்யும் துரோகம் என்பதை உணர்ந்து... இனி வரும் காலங்களிலாவது காலத்தே திருக்கோயில் முறைமைகளை நடத்திடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மகன்
அமிர்தலிங்கம் பகீரதன்



# சென்று வாருங்கள்
# என் தாயே



நெருநல்
உளனொருவன்
இன்றில்லை
என்னும்
பெருமை
உடைத்திவ் வுலகு

இது என் தாயாருக்கு மிகவும் பிடித்த குறள். இந்தக் குறள் சொல்வது போல, அவர் நேற்று நம்முடன் இருந்தார். இன்று இல்லை.

பெற்றோர் திருமணமாகி பத்து ஆண்டுகளின் பின் பிறந்து, அவர்களின் மூத்த செல்லக் குழந்தையாய் 'தவம்' என வாய்நிறைய அழைக்கப்பட்டு, செழிப்பாக வாழ்ந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

என் தந்தையாரைக் கரம் பிடித்து அவருடன் இல்வாழ்க்கையிலும் அரசியலிலும் 35 வருடங்கள் அவரின் இன்பத்திலும் துன்பத்திலும் உடனிருந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

தந்தை செல்வா அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு வீ ஏ கந்தையா, பட்டிருப்புத் தந்த பெருமகன் இராசமாணிக்கம் போன்றவர்களால் வளர்க்கப்பட்டு, முதலில் தமிழரசுக் கட்சி மேடைகளிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளிலும் உங்கள் பாட்டாலும் பேச்சாலும் உங்களுக்கென்று ஒரு தனி முத்திரை பதித்த என் அன்னையே! சென்றுவாருங்கள்.

தமிழரசுக் கட்சியின் மாதர் முன்னணிச் செயலாளராகவும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி மகளிர் பேரவைச் செயலாளராகவும் செயற்பட்டு நீங்கள் சார்ந்த இயக்கத்துக்கும் எம் தமிழ் இனத்துக்கும் உங்கள் பங்களிப்பை ஆற்றிய என் தாயே! சென்று வாருங்கள்.

சட்ட மறுப்பு, உண்ணாவிரதம், உரிமைப் போராட்டம் என எல்லாவிதப் போராட்டங்களிலும் குறிப்பாக ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்திலும் சத்தியாக்கிரகத்திலும் பங்குகொண்டு முத்திரை பதித்த என் தாயே! சென்றுவாருங்கள்.

1961இல் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் என் தந்தையுடன் தடுப்புக் காவலில் இருந்தபோது, இராணுவக் குடும்பங்களின் பிள்ளைகள் பாடசாலை செல்வதைக் கண்டு தன் குழந்தைகளை எண்ணி வாடிய என் தாயே!

ஆறு மாதங்களின் பின் உங்களைப் பார்க்க நாங்கள் வந்தபோது, உங்களை மறந்ததனால் உங்களுடன் சேர மறுத்தோம். அப்பொழுது பதைத்துப் பரிதவித்த என் தாயே! சென்று வாருங்கள்.

11 அரசியலில் ஈடுபட்டபோதும் உங்களால் முழுந்த அளவு எங்களை வளர்த்து ஆளாக்கிவிட்ட என் அன்னையே! எமக்கு உணவுடன் தமிழ் உணர்வையும் வீரத்தையும் ஊட்டி வளர்த்த என் தாயே! சென்றுவாருங்கள்.

உற்றார் உறவினரையும் அரசியல் அன்பர்களையும் இளைஞர் சமுதாயத்தையும் வீட்டுக்கு வந்த அனைவரையும் அரவணைத்து உபசரித்து உங்கள் வீட்டையே ஓர் அரசியல் தளமாக்கிய என் தாயே சென்று வாருங்கள்.

என் தந்தையுடன் இணைந்து நீங்கள் நேசித்த வடக்கு கிழக்கு மகாணங்களின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்து உங்கள் பாட்டாலும் பேச்சாலும் அனைவரையும் கவர்ந்து கொள்கை பரப்பிய என் தாயே! சென்றுவாருங்கள்.

இலங்கையில் மட்டுமன்றி, தென் இந்தியாவில் தமிழ்நாடு உட்பட உலகில் தமிழர் வாழும் இடமெல்லாம் சென்று அனைவருடைய உள்ளங்களையும் கவர்ந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

ஆரம்ப வாழ்க்கை முதல் இன்று வரை ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் எதிர்கொண்டு, 'என் கணவர் இருக்கும்வரை எனக்கு எந்தக் கவலையும் இல்லை' என வாழ்ந்து, அவர் மறைந்த பின்னும் தொடர்ந்து வந்த விமரிசனங்கள், தூற்றல்கள் அனைத்தையும் மன உளைச்சலுடன் தாங்கிய என் தாயே! சென்றுவாருங்கள்.

உங்கள் கணவர் உங்கள் கண்முன்னே காவல்துறையால் தாக்கப்பட்டதையும் உங்கள் பிள்ளைகள் அரசியலில் ஈடுபட்டதால் துன்பப்பட்டதையும் நேரிலே பார்த்தும், தமிழினத்தின் விடிவுக்கு இது மருந்தாகுமெனில் அதை நான் தாங்குவேன் என இறுதிவரை உறுதியுடன் வாழ்ந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

நீங்கள் உப்பிட்டவர்களே உங்கள் கண்ணிறைந்த கணவரின் உயிரை உங்கள் முன்னால் பறித்தபோது அந்தப் பேரிழப்பைத் தாங்கி 26 ஆண்டுகளாக விதவை வாழ்க்கை வாழ்ந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

அந்நிய நாட்டிலே குடியேறி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் அன்பில் திளைத்து, சுய மரியாதையுடனும், சுய கவுரவத்துடனும் இறுதிவரை மகிழ்வாக வாழ்ந்த என் அன்னையே! சென்றுவாருங்கள்.

என் மனைவியை உங்கள் மகள்போல அன்பு செலுத்தி, அவரின் ஆதரவுடன் உங்கள் வாழ்க்கையின் இறுதி அத்தியாயம்வரை இருந்து என் பிள்ளைகளின் அன்பை அநுபவித்து, அவர்களின் இசையை இரசித்து வாழ்ந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

புகுந்த நாட்டில் பல தமிழ் அமைப்புக்களுடன் ஈடுபட்டு, அவர்களுடன் பணியாற்றி, ஆதரவு கொடுத்து, அவர்களின் நட்பையும் அன்பையும் நிறையவே சம்பாதித்து வாழ்ந்த என் தாயே! சென்றுவாருங்கள்.

நான் ஈடுபட்டுள்ள ஏடு அமைப்புக்கு உங்களால் ஆன உதவிகளைப் பல வழிகளிலும் வழங்கி, எங்கள் நிதி திரட்டும் நிகழ்வுகளுக்கு ஆதரவளித்தீர்கள். பெற்றோரற்ற ஒரு சிறுவனை, உங்களுக்கு வரும் உதவிப்பணத்திலிருந்து ஒரு பங்கை வழங்கி, ஆதரித்த என் அன்னையே! சென்றுவாருங்கள்.

உங்கள் கணவரின் உயிரைப் பறித்தவர்கள் நீங்கள் வாழும்போதே அழிந்து போவதைப் பார்த்தும் ஒரு சாதாரண பெண்ணாக ஆனந்தம் அடையாமல், தமிழீழப் போராட்ட முடிவைப் பார்த்து, எம் தமிழ் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் அழிந்ததைப் பார்த்து கண்ணீர்விட்ட என் தாயே! சென்றுவாருங்கள்.

உங்கள் அழகு முகத்தையும் இனிய குரலையும் இனி எப்போதும் கேட்கமுடியாது என எண்ணும்போது கவலை வந்தாலும் நீங்கள் ஒரு நிறைவான வாழ்க்கை வாழ்ந்தீர்கள் என உணரும்போது என் மனத்தைத் தேற்றி கண்ணீர் மல்க விடைதருகிறேன். சென்றுவாருங்கள் தாயே! என் தந்தையுடன் இணைந்து உங்கள் வாழ்க்கையின் இறுதி அத்தியாயத்தை முடியுங்கள் என விடைதருகிறேன். சென்றுவாருங்கள் அம்மா! ■

மு நித்தியானந்தன்

# மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்: ஓர் அரசியல் சாட்சியம்

சுதந்திரத்திற்குப்பிற்பட்ட இலங்கைத்தமிழர் அரசியல் தளத்தில் 1956 1977 வரைப்பட்ட காலப்பகுதியில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக தன்னை நிலை நிறுத்தியிருந்தது.. 1956 க்குப்பின் நடைபெற்ற 5 பொதுத்தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி தொடர்ந்து பெற்ற வெற்றிகள் இதனை உறுதிசெய்வனவாகும்.

தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தில் தமிழ்மக்களை பேரணியில் திரட்டி அறப்போராட்டத்திலும் ஏனைய சட்டமறுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தி அரசியல் பிரக்ஞையை அடிமட்டமக்கள் மத்தியில் வேஷுன்றச்செய்ததில் தமிழரசுக்கட்சியின் பணி அளப்பரியது.


தமிழ் மக்கள் திரளை அரசியல் மயப்படுத்திய பணியில் அவர்கள் இட்டுச் சென்ற அஸ்திவாரம் ஆழ்ந்த அர்ப்பணிப்பிலும் கடும் உழைப்பிலும் உருவானது; அரசுக்கெதிரான அச்சமற்ற போராட்டங்களிலே வார்க்கப்பட்டது. பொலிஸ் அடக்குமுறை, கைது,சிறைச்சாலை என்ற எதிர்ப்பியக்கத்தில் மூர்ச்சனை கொண்டது; ஆணவம் கொண்ட ஆட்சியாளர்களின் புறக்கணிப்பிற்கும் அலட்சியத்திற்கும் எள்ளிநகையாடலுக்கும் மத்தியில் நெஞ்சை நிமிர்த்திய இலட்சிய வேட்கையில் வேர்கொண்டது.

இந்த மாபெரும் அரசியல்பணியில் ஒரு கால் நூற்றாண்டு பகுதியை தனக்குரிமையாக்கும் தகுதி கொண்டவர்



மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள்.

தமிழரசுக்கட்சியின் பொதுமேடைகளில் அவரது கம்பீரமான பிரசன்னம் மக்கள்மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. மேடைகளில் அவர் தேசிய எழுச்சிப்பாடல்களை இசைத்தபோது கூட்டம் உணர்வு வெள்ளத்தில் தோய்ந்தது. அரசியல் அணிதிரட்டலில் அரசியல் விடுதலை இயக்கப் பாடல்கள் ஆளுமை கொண்ட பெண்களால் இசைக்கப்பட்டபோது அது பெரும் ஆகர்ஷணசக்தியாய்



திகழ்ந்திருப்பதை இந்திய சுதந்திரப்போராட்டங்களில் காணமுடிந்திருக்கிறது. ஆபிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கப்போராட்டங்களில் அரசியல் மேடைகளில் தோன்றி ஆபிரிக்கப்பெண்மணிகள் இசைத்த பாடல்கள் புரட்சி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

தமிழரசுக் கட்சியின் ஆரம்ப அமைப்புக் கட்டத்தில் சின்னஞ் சிறு கிராமம் தோறும் தனது கணவருடன் சென்று மக்களுடன் உறவாடி அவர்களின் மத்தியில் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்தார். பெற்றோமெக்ஸ் விளக்கில் ரூலாந்தர் வெளிச்சத்தில் நடந்த கூட்டங்களில் எல்லாம் அக்கறையோடு பணி செய்திருக்கிறார். அரசியல் பிரச்சாரக் கூட்டங்கள் எதிர்க்கட்சிகளின் மூர்க்கத்தனமான எதிர்ப்பின் மத்தியில் நடைபெற்றபோதெல்லாம் அச்சமின்றி மேடையில் தோன்றியவர். கைக்குழந்தையை வைத்துக்கொண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தனது கணவருடன் போராட்டத்தில் இணைந்த மாதரசி இவர். கணவருடன் தடுப்புக்காவலில் மாதக்கணக்கில் சிறைவாசம் கண்ட பெருமகள்.

அரசியல் மேடைகளும் போராட்டங்களும் பொலிஸ் நிலையங்களும் பனாகொடை முகாமும் இவரது உலகமானது.

இவரது அரசியல் வாழ்வு உல்லாசப்பூங்காவாக இருந்ததில்லை ; காலம்பூராவும் முட்பாதையாகவே இருந்திருக்கிறது. தனது கணவரையே துப்பாக்கித் தோட்டாவிற்கு பலிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய பயணத்தை அவர் தேர்ந்திருந்தார்.

விருந்தோம்பும் பெரும் பண்பு கொண்ட இவர்களின் அருங்குணத்தையே பலவீனமான நுழைவாயிலாகக் கொண்டு, கொடியவர்கள் செய்த கோரதாண்டவத்தை கண்முன்னால் காண நேர்ந்த சரித்திரத்தின் ஒரு சாட்சியம் இவர்.

தமிழர் அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்ட பெரும் தலைவர்களை நாம் கண்டதுண்டு.அன்றும் தான், இன்றும்தான். அவர்களின் துணைவியரை நாம் அறிந்ததில்லை. பலர் தமது கணவரின் அரசியலுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றிருந்தவர்கள். இன்னும் பலர் இது அநாவசியமான அலுவல் என்று கணவரின் அரசியல் செயற்பாடுகளை அசூசையோடு பார்த்தவர்களாக இருந்திருக்கிறார்கள். காதல் துணைவனின் காரியம் யாவிலும் கைகொடுத்து வாழ்ந்த மகராசி இவள்.

விடுதலை இயக்கங்கள் தமது குருட்டுத்தனமான பயணத்தில் அரும்பெரும் ஆளுமைகளை அழித்திருக்கின்றன.அந்த நாசகாரச்செயலின் விளைவால் ஒரு சூனிய அரசியல் உலகிற்குள் அவர் சிறைப்பட நேர்ந்தமை துரதிர்ஷ்டமானது.

சென்னையில் அமிர்தலிங்கம் அவர்களோடு மங்கையர்க்கரசியையும் நான் காண நேர்ந்த சந்தர்ப்பங்களில்,ஈழத்து அரசியல் நிலை குறித்து மங்கையர்க்கரசி கொண்டிருந்த கரிசனையை அறிந்துள்ளேன்.

■

# கொண்டலிலை மழை கறுக்கத் தோன்றிய தேவதைகள்

ஊர்க்கோயிலுக்குள் யக்கோமுத்து மூப்பரும் சூசைப் பிள்ளை சங்கிலித்தாமும், எங்கடை தொகுதிக்கு திருநாவுக்கரகு பாராளுமன்ற உறுப்பினருமாகவும் இருந்த காலத்தில, யசிந்தா சாமத்தியப்பட்ட மூன்றாம் நாள் நான் ஊரைவிட்டுப் புறப்பட்டேன். காலில் ஒட்டியிருந்த கடைசிச் செம்மண்ணையும் கழுவி, முதன்முதலில் நாய் மூஞ்சைச் சப்பாத்து போட்டு, ஆயிரம் கனவுகளோடும் கவலைகளோடும் படலையைத் தாண்டினேன்.

விட்டிட்டு வர அம்மா, அம்மம்மா, நாலு தென்னை, இரண்டு முருங்கை, ஒரு மஞ்சமுண்ணா, ஒரு நாய், இரண்டு வாகை மரம் - இதுக்குள்ள ஒரு சிறிய வீடு.

**எழுதித் தீரா பக்கங்கள்:**

கனடா செல்வம் அருளானந்தம் தான் ஆரம்பகால வாழ்க்கையை புலம் பெயர் மண்களில் அனுபவித்ததையும் அப்படி ஊர்த்தமிழில் எழுதி புத்தக வெளியீடு விழா லண்டனில் அண்மையில் நடைபெற்றது. அந்த புத்தகத்திலிருந்து சில பகுதிகளை தமிழர் தகவல் வாசகர்களுக்காக :

இதைத்தவிர வேறு ஒன்றுமில்லா நான். வீட்டை விட்டு வெளிக்கிடுவது பெரும் துன்பமாய் இருந்தது.

மானிப்பாயில் இருந்து மலர் மாமியும் யாழ்ப்பாணத்தில் இருந்து ராசேந்திர மாமாவும் குடும்பமாய் வந்ததில் வீடு நிறைந்திருந்தது. அம்மா இரண்டு மூன்று நாளாய் பேசாமலேயே விட்டிட்டா. அந்தப் பகல் பொழுது அந்தகாரமாய் இருந்தது.

அம்மம்மா தான் காசுமாறத் திரிந்தாலென்ன சமையலுக்கு, அடுக்குப் பண்ணினாலென்ன எண்டு ஓடி ஆடித் திரிந்தா. வெளிக்கிடற நேரம் வர திடீரென்று என் கன்னத்தைத் தடவிய படி "நான் செத்தால் என்னை யார் எடுத்துத் தாக்கிறது. இப்படி கஸ்ரப்பட்டு வளர்த்தது என்னை எடுத்து அடக்கம் செய்து ஒருபிடி மண் போடுவாய் எண்டல்லோ!" என்றா.

தூரத்தில் நின்ற ராசேந்திர மாமா "கிழவி குழம்பி விட்டுது" என்று சொல்லியவண்ணம் ஓடிவந்து "கிழவி! திருகிப் போடுவன். கடைசியிலை எல்லாரையும் குழப்பாதை. அவன் போறான். இரண்டு வருசம் உழைக்கிறான். வீட்டைத் திருத்திறான். திரும்பி ஊருக்கு வாறான். கல்யாணம் முடிக்கிறான். அது மட்டும் நீ கல்லுப்போலை இருப்பாய்" எனச் சத்தம் போட்டார். நான் முன்னால நிண்ட, பட்டுக் கொண்டு போற பனையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான், என் நண்பர் அருள்நாதர், கொழும்பில் எங்களுடன் சேர்ந்த பாலன் மூன்று பேருமா பிரான்சுக்குப் போறதாகத் திட்டம். என்னுடைய மச்சான்தான் பிரான்சில் இருந்து எல்லா ஒழுங்குகளையும் செய்தார்.

அவர் சொன்னபடி செக்கோஸ்லவாக்கியா விசாவும் பெல்ஜியம் விசாவும் எடுத்தாயிற்று. ஏரோபுளொட்டில் ரிக்கற்றும் எடுத்தாச்சுது. மொஸ்கோவில் மூன்று நாள்கள் தங்கி பெல்ஜியம் போய் அங்கிருந்து காரில் கள்ளமாகப் பாரிசுக்குப் போவதுதான் திட்டம்.

மொஸ்கோ வருமட்டும் ஒரு பிரச்சினையும் இல்லை. அந்தப் பயணத்தில் மூவரும் மிக நெருக்கமாகி விட்டோம். பிரான்சில் வாழும் காலம் முழுவதும் ஒருவருக்கொருவர் உதவியாகவும் நட்பாகவும் பிரியாமல் இருப்பதாகவும் உறுதிபூண்டோம். ஆனால் வந்த இரவே பிரிய வேண்டியதாய்ப் போச்சுது!

மொஸ்கோவில் நல்ல விடுதி தந்தார்கள். மூவருக்கும் ஒரு அறை. களைப்பில் நானும் பாலனும் உடனே படுத்துவிட்டோம். அருள்நாதருக்கு நித்திரை வரவில்லை. மனைவியை

நினைத்துப் புலம்பிக் கொண்டிருந்தார். தான் குளித்துவிட்டு செபமாலை சொல்லிப்போட்டுத்தான் படுக்கப்போறேன் என்று சொல்லிக் கொண்டு குளிக்கப்போனார். நாங்கள் அயர்ந்து விட்டோம். திடீரென்று பெரிய அமளியாய் இருந்தது கதவு 'படார் படார்' என தட்டிச் சத்தமும், முன்பின் தெரியாத மொழியில் கலவரமுமாய் இருந்தது.

அருள்நாதர் குளிக்கப்போய் இருக்கிறார். நல்ல சுடுதண்ணி வந்திருக்கு. சுடுதண்ணியையும் பச்சைத் தண்ணியையும் கலந்து வக்கை நிரப்பிப் போட்டு 'வெளிநாடென்றால் வெளிநாடுதான்' என்று சொல்லியவண்ணம் வக்குக்கு வெளியே நின்று 'செகசோதியாய்' அள்ளி ஆசை தீரக் குளிச்சிருக்கிறார். குளிச்ச தண்ணி நதியாய்ப் பெருக்கெடுத்தோடிக் கீழே போய் இன்னொரு அறையை நிறைச்சிருக்கு அவங்கள் ஓடிப்போய் பொறுப்பாளருக்குச் சொல்ல ஒரு பெண், தண்ணி எப்படி வருகுது எண்டு கண்டுபிடித்து எங்கடை அறையைப் பெரிதாயத் தட்டியிருக்கிறாள். குளித்துக் கொண்டிருந்த அருள்நாதர் என்னவோ ஏதோவென்று குளித்தபடியே ஓடிப்போய்க் கதவைத் திறந்திருக்கிறார். என்னைவிடக் கறுப்பும், பெரிய சரீரமும் கொண்ட இவருடைய தோற்றத்தையும் கோலத்தையும் கண்டு, வந்தவள் குளறத் தொடங்கிவிட்டாள்.

படுத்திருந்த நாங்கள் ஓடி வந்து இந்தக் காட்சியைப் பார்த்துப் பயந்துவிட்டோம். பாலன் ஓடிப்போய் துவாயைக் கொண்டுவந்து "முதலிலை இதைக் கட்டுங்கோ" என்று சொல்லிப்போட்டு அவளோடை கதைக்க வெளிக்கிட்டான். அவளோ கத்திக்கொண்டே நின்றாள். "சொறி! சொறி! சொறி!" என்று சொன்னாலும் இன்னும் பெரிதாகச் சத்தம் போட்டாள்.

பாலன் "பொறு இவளை எப்படிச் சமாளிக்கிறேன் பார்" என்று எங்களுக்குச் சொல்லிப்போட்டு "இந்திரா காந்தி... நேரு... நேரு, இந்திரா காந்தி" என்று திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டு நின்றான். "இது பெரிய பிரச்சினையா வரும் போல கிடக்கு. நீ என்னடா சொல்லிக் கொண்டு நிக்கிறாய்" என்று நான் கேட்க "இல்லை மச்சான். பேப்பரிலை வாசிச்சனான். ரஷ்ய மக்களுக்கு நேரு இந்திரா காந்தியென்றால் பெரிய விருப்பம் எண்டு" என்றான்.

"எங்கடை வி. பொன்னம்பலமும் அடிக்கடி ரஷ்யா வாறவர். அவற்றை பேரையும் சேர்த்துச் சொல்லனடா.... கண்டபடி கதையாதை. சிஐஏ எண்டு சைபிரியாவுக்கு அனுப்பிப் போடுவாங்கள்" என்று நான் சொல்லிக் கொண்டிருக்க மூன்று நான்கு அதிகாரிகள் வந்துவிட்டார்கள். அதில் ஒருவருக்கு ஆங்கிலம் சாடையாய்த் தெரியும் போல கிடந்தது. இந்த அறையை இனிப் பாவிக்க முடியாது என முடிவு செய்து மூன்று பேருக்கும் வேறு வேறு அறைகளைத் தந்து வேற்று நாட்டுக்காரருடன் மூன்று இரவும் தங்கும்படி செய்தார்கள்.

மூன்றாம் நாள் இரவு மொஸ்கோவில் இருந்து பயணம் செய்து அதிகாலையில் பெல்ஜியம் விமான நிலையத்தை வந்து சேர்ந்தோம். விமான நிலையத்திற்கு வந்தபின்னர்தான் தொலைபேசி எடுக்கச் சொன்னார்கள். நாங்கள் தொலைபேசியில் அழைத்த பின்புதான் எங்களை அழைத்துச் செல்பவர் பிரான்சிலிருந்து புறப்பட்டார். நாங்கள் விமான நிலையத்தில் பசியுடனும் பயத்துடனும் காத்திருக்க அவர் மதியத்துக்கு மேல்தான் வந்து சேர்ந்தார். கனக்க எங்களோடு பேசப்படாது என்ற முன்முடிவோடும் இறுகிய முகத்தோடும் ஐரோப்பிய வாசத்தோடும் வந்த அந்த யாழ்ப்பாண முகத்தை எங்களுக்குப் பிடிபடவுமில்லை. பிடிக்கவுமில்லை.

"இப்பொ போக முடியாது. இரவுதான் போகவேணும். அதுவரை விமானநிலைய உணவகத்தில் இருங்கோ" என்றார். 'ஏதாவது சாப்பிட்டீங்களா? சாப்பிடப்போறீங்களா? குடிக்கப் போறீங்களா?' என்று அவர் கேட்கவேயில்லை.

சரி. நாங்களாகச் சாப்பிடுவோம் என்று ஐம்பது டொலரை மாத்தினால், பெல்ஜியப்

பணத்தில் களிசான், சேட்டுப் பைகள் நிறைந்துவிட்டன. "இதை என்ன தம்பி செய்யிறது"? என்று அவரைக் கேட்க "நாலு கோப்பிக்கும் நாலு பண்ணுக்கும் ஓடர் பண்ணுங்கோ. உந்தப் பணம் காணாமல் வரும்" என்றார். அப்படியே காணாமல் வந்தது. சாப்பிட்டும் பேசியும் நித்திரை தூங்கியும் ஒரு மாதிரி பொழுது கழிந்தது.

இரவானதும் கார் ஓடத் தொடங்கியது. "இது உங்கள் வாழ்க்கையில் முக்கிய கட்டம் இதிலை வெற்றி கொண்டால் தான் வெளிநாடு. போடரில் உசாராய்க் கதைக்கவேணும். "இலங்கையில் கவர்மெண்ட் வேலையில் இருக்கின்றோம். அரசு அலுவலக செக்கோஸ்லவாக்கியா செல்கின்றோம். அதற்கு முதல் பாரிஸ் நகரைப் பார்க்கும் ஆசையில் இப்போது பாரிசுக்கு செல்கிறோம்". குடிவரவு அதிகாரிகளுக்கு இதைத்தான் சொல்ல வேண்டும் எனத் திரும்பத் திரும்பச் சொல்லி தந்தார்.

எல்லை வந்தது. எங்களைக் கண்ட உடனேயே நாலைந்து அதிகாரிகள் காரைச் சுற்றி நின்றார்கள். ஒருவர் பாஸ்போட்டைப் பார்த்து ஏதோ கேட்க நாங்கள் ஏதோ சொல்ல நீண்ட நேரம் சென்றது. அந்த அதிகாரிகள் கடைசிவரையும் விசா இல்லாமல் நாங்கள் பிரான்சுக்குள் நுழைய முடியாது என்று உறுதியாக மறுத்தார்கள்.

எங்களைக் கூட்டி வந்தவரும் ஏதோ கதைத்துப் பார்த்தார். ஒன்றும் சரிவரவில்லை. இறுதியில் அவரே ஒரு முடிவுக்கு வந்தார். "இந்த போடர் கொஞ்ச கஸ்ரமான போடர். இன்னும் நூறு மையிலுக்கப்பால் ஒரு சிறிய போடர் இருக்கு. போக்குவரத்துக் குறைஞ்ச இடம். அங்கு இலகுவாக இருக்கும். கொஞ்சநேரம் போனால் சாமமாய்ப் போகும். அவங்களும் நித்திரைத் தூக்கத்தில இருப்பாங்கள். சரியாக் கவனிக்க மாட்டாங்கள். பாஞ்சுவிடலாம்" எனச் சொல்லியபடியே காரைத் திருப்பினார்.

நூறு மையிலுக்கப்பால் சாமத்தில் அந்தச் சிறிய போடர் வந்தது.

வெட்டவெளி ஒரு அளவான அறை போன்ற கட்டடம். தெருவை மறித்து ஒரு தடி.. இரண்டு அதிகாரிகள் மாத்திரம் இருந்தார்கள். எங்கள் மூன்று பேரையும் அறைக்குள் கூப்பிட்டார்கள். ஏதோ விசாரித்துப் பார்த்தார்கள். உலக வரைபடத்தில் நான்கு முறை தேடியும், நான்கு புத்தகங்களில் தேடியும் சிறீலங்கா என்றொரு நாடு இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை. எங்களை அழைத்து வந்தவரைக் கூட்டி வரச்சொன்னார்கள். வந்தவர் அவர்களுடன் கதைத்துப் போட்டு "உங்களுக்கு பிரான்ஸ்சுக்கு விசா இல்லையாம். உங்களைப் போக விடமுடியாது. திரும்பிப் போகச் சொல்றாங்கள்" என மொழி பெயர்த்தார்.

பாலன் "நீங்கள் தானே தம்பி கூட்டி வந்தனீங்கள். இப்ப இப்படிச் சொல்லுறியள்" எனக் கேட்டான்.

"நான் இப்படித்தான் கதைப்பன். இல்லாவிட்டா என்னைச் சந்தேகிப்பாங்கள்" என்று கூறிவிட்டு "இனி நான் இப்படித்தான் சொல்லப் போறன். நீங்கள் துணிவாய் இருக்கவேணும்" என்றார்.

"நான் பெல்ஜியம் எயாப்போட்டுக்கு ஒருவரை வழி அனுப்ப வந்தனான். அப்போ இவங்கள் மூவரையும் கண்டன். என்னுடைய மொழி பேசுறவங்களாய் இருந்தாங்கள். பாரிசில் தங்களை விடும்படி கேட்டார்கள். அதுதான் கூட்டி வந்தனான். எனக்கு விடிய வேலைக்கு நிக்க வேணும். நான் போகப்போறன்" என்றார்.

நாங்கள் திடுக்கிட்டோம். அதிகாரிகள் ஏதோ கதைக்க இவர் ஏதோ கதைக்க முடிவில்லாமல் போய்க் கொண்டேயிருந்தது. திடீரென்று அவர் போய்க் காரில் இருந்துவிட்டார். எங்களை வெளியே போகும்படி அந்த அதிகாரிகள் சொன்னார்கள்.

நாங்கள் காருக்குள் போக, அவர் "காருக்கை வரவேண்டாம். அவங்களுக்கு முன்னாலை போய் நில்லுங்கோ" எனக் கலைத்தார். கட்டடத்துக்குள்ளும் இல்லாமல் காருக்குள்ளும் இல்லாமல் குளிர்வெளியில்

நின்றோம்.

அப்போதுதான் அருள்நாதர் வானத்தைக் காட்டி "கொண்டலிலை மழை கறுக்குது" என்றார். அவர் சொன்ன சொற்ப நேரத்தில் வானத்தைக் காட்டி "மழை மாதிரியும் தெரியேல்லை. தூவானம், மாதிரியும் தெரியேல்லை. வெள்ளைப் பூமாதிரி தூவுது. என்ன சனியன்ரா இது?" அவர் கேட்க "ஐயோ இதுதான்ரா ஸ்னோ" என நான் ஆர்ப்பரித்தேன்.

குளிர் இப்போ காதைப் பிய்க்குது.

திரும்பவும் அந்த அலுவலகத்துக்குள் போய் நின்றோம். இப்போது அவர்கள் கொஞ்சம் கனிவாக இருந்தார்கள். ஒரு படம் கீறிக் காட்டினார்கள். "பெல்ஜியத்துக்கு திரும்பிப் போங்கோ. இந்த இடத்தில் பிரான்ஸ் தூதரகம் இருக்கு. அங்கு விடியப் போனீங்கள் என்றால் தாராளமாக விசா தருவார்கள். வேண்டிக் கொண்டு வாங்கோ. நாங்கள் தாராளமாய் விடுகின்றோம்" என்றார்கள்.

அந்த நேரம் எங்களைக் கூட்டி வந்தவர் திடீரென வந்து "இன்னும் அரை மணி நேரம்தான் நிற்பேன். நீங்கள் இவங்களை விடாவிட்டால் நான் போய் விடுவேன். நீங்களே கொண்டுபோய் பெல்ஜியத்தில் விடுங்கள்" என்று சொன்னார்.

அவர்கள் "தயவுசெய்து நீ கூட்டிக் கொண்டு வந்த மாதிரியே கொண்ட விடு. எங்களுக்கு கொண்டுபோற வசதியில்லை. இவங்களை வைத்திருந்து நாங்கள் என்ன செய்யிறது?" என்று அவரிடம் கெஞ்சினார்கள்.

அவர் திரும்பப் போய் காருக்குள் படுத்துக் கொண்டார். ஒரு மணி நேரம் கழிந்தது. இப்போ விடியப்புறம் நாலு மணியிருக்கும். அந்த ஆளில்லா வெளியில் ஒரு வாகனம் வந்தது. யாரோ எல்லை கடப்பவர்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

பனி தூவிக் கொண்டிருக்க இரண்டு அழகான பெண்கள் காரிலிருந்து இறங்கினார்கள். அந்த வரண்ட இடத்தில் பூமாரி பொழிஞ்ச மாதிரி இருந்தது. அந்த இடமே உயிர் பெற்றது. இந்த இக்கட்டிலும் என்ன மாதிரியான வடிவு - கொண்டலிலை மழை கறுக்க குமரி அழகு .. என்று பாலன் ஏதோ பாட வெளிக்கிட்டான். வந்தவர்கள் கோப்பி கொண்டுவந்து அந்த அதிகாரிகளுக்குக் கொடுத்தது மாத்திரமல்ல, எங்களுக்கும் தந்தார்கள். அதிகாரிகளும் இப்போ ஒரு கொண்டாட்ட மனநிலைக்கு வந்துவிட்டார்கள்.

அன்பான பெண்கள், அழகான பெண்கள். அவர்கள் சந்தோசத்திற்கு நாங்கள் இப்போ இடஞ்சலாய் இருக்கின்றோம் என்பது போலப்பட்டது. அதில் ஒரு பெண்ணுக்கு சிறிலங்கா நல்லாய்த் தெரிந்திருந்தது. தேயிலை பற்றி, யானை பற்றி, கறுவாபற்றியெல்லாம் எங்களுடன் ஆங்கிலத்தில் கதைக்கத் தொடங்கி விட்டாள். அதிகாரிகள் விடியப் போகிறதே என்ற கவலையில் இருப்பது போலப்பட்டது.

நாங்கள் இப்படியே நின்றால் அப்பெண்கள் திரும்பிப் போவது தவிர வேறு வழியில்லை. குளிரில் கோழிக்குஞ்சுகள் போல் குறுங்கிப் போய் நின்ற எங்களுக்காய் ஏதோ அதிகாரிகளிடம் வாதிட்டார்கள். வேறு வாகனங்களோ ஆள் நடமாட்டமோ இல்லை. அதிகாரிகளும் பெண்களுமாகச் சேர்ந்து பேசினார்கள்.

பிறகு பிரான்ஸ் பக்கமாய் குறுக்காலை இருந்த தடையை ஒரு அதிகாரி தூக்கி "போய்த் தொலையுங்கோ" எனக் கையசைத்தான்.

நாங்கள் காரில் ஏறியவுடன் எங்களைக் கூட்டி வந்தவர் "அவளள் இஞ்சினேக்கை திரியிற" எனத் தொடங்க, "இல்லை யண்ணை... அதுகள் தெய்வங்கள்" என்றேன்.

"என்ரை காசிலை குறைக்க மாட்டீங்கள் தானே" என்று சொல்லியவண்ணம் காரை ஸ்ரார்ட் செய்தார்.

விடியத் தொடங்கி கதிரவன் சாடையாய்த் தெரிந்த ஓர் இளவேனில் காலத்தில் நான் பாரிசுக்குள் புகுந்தேன்.

# மதமும் மகாநாடுகளும்

தமது மதத்தைப் போற்றுவதற்கு அல்லது வளப்படுத்துவதற்கு அடிப்படையான சமய உணர்வு வேண்டும். அதன் கோட்பாடுகளை ஆய்ந்திருக்கவும் வேண்டும். அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பதும் அதற்கான வேதத்தைத் தெரிந்திருப்பதும் சயமத்தைத் தலைநிமிரச் செய்யும். தகவலரையும் தக்கார் ஆக்கும். விளம்பரங்களும் வேடங்களும் பக்தியைப் பயனளிக்கச் செய்வதில்லை. பட்டினத்தார் பாடவொன்று;


"நீற்றைப் புனைந்தென்ன நீராடிப் போயென்ன நீ மனமே மாற்றிப் பிறக்க வழியறந்தாயில்லை மாமறை நூல் ஏற்றுக்கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய் ஆற்றில் கிடந்தும் துறையிறயாமல் அலைகின்னறயே" என்றுரைக்கிறது.

ஒரு அனுபவத்தைச் சொல்லுகிறேன்; ஒரு முறை கொழும்பு மெசேஞ் சர் வீதியில் உள்ள 'தூளையான்' நிறுவனத்தின் தலைவர், அப்துல் கறீம் சாகிப் அவர்களைப் பார்க்கப் போயிருந்தேன். அங்கு சைவம் போற்றும் ஒரு தர்மகர்த்தர் வந்திருந்தார். பேச்சுவாக்கில் அவரைப்பார்த்து, அப்துல் கறீம் கேட்டார்; "நீங்கள் சைவரா இந்துவா என்று, தர்மகர்த்தா சற்று தாமதித்து, தான் சைவம் என்றனர். அடுத்து அப்துல் கறீம், "நீங்கள் 'சிவஞான போதம்' படித்திருக்கறீர்களா?" எனக் கேட்டார். தர்மகர்த்தர்பாடு சங்கடமாயிற்று. உள்ளே போன கறீம் அவர்கள் ஒரு நூலுடன் வந்தரன். அது 'சிவஞான போதம்'. "நான் பதிப்பித்தது, படித்துப் பார்த்துவிட்டு சொல்லுங்கள்" என்றவரிடம், இவர் பவ்வியமாக எழுந்து நின்று இருகை நீட்டிப் பெற்றுக் கொண்டதைக் கண்டிருந்தேன்.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நமது சமய குரவர்கள் எவரும் மாநாடு கூட்டி மதம் வளர்க்கவில்லை. வாழ்ந்து காட்டித்தான் வழிசமைத்தார்கள். விளம்பரங்கள் செய்ததில்லை. ஆனால் விவாதங்கள் செய்ததுண்டு. வேதத்தை உணராது விளம்பரங்கள் மூலம் மதம் வளர்ப்பது என்பது எப்படி? இதைத்தான் பட்டினத்தார் 'துறையறியாமை' என்றார். அறிவுசார் வாழ்வில் ஆன்மிகம் அறிந்திருக்கக்கூடாததா என்ன?

■

# வாழத் தெரியாது: வாழ்விக்கத் தெரியும்!



நாமெல்லாம் வீட்டை விட்டு வெளியே போகும் போது கவனமாகப் பூட்டிப் பாதுகாப்பு ஏற்பாடு செய்துவிட்டுப் புறப்படுவோம். திரும்பி உள்ளே வந்ததும் வெளிப்பக்கப் பூட்டை நீக்கி உள் விசித்திர மனிதர் கவிஞர் இதற்கு நேர்மாறான காரியம் செய்வார். தான் வெளியேபோகும் போது வீட்டைத் திறந்து போடுவார். உள்ளே வந்ததும் பூட்டும்படி ஏற்பாடு செய்திருந்தார்.



ஏனிந்தக் கிறுக்குத் தனம் என்று கேட்டபோது, “உள்ளே விலை மதிப்பற்ற பொருள் இருக்கும் போது தானே பூட்டுவார்கள். இந்த வீட்டில் உள்ள அதிக மதிப்புடைய பொருள் நான்தான். அதனால் நான் வெளியே போனதும் பாதுகாக்க அங்கு என்ன இருக்கிறது? அதனால் திறந்து போடுகிறேன்!” என்றார். இந்த eccentric attitude தான் ஒரு கவிஞனின் சிறப்பம்சம்.

ஒரு நுட்பமான செய்தி சொல்ல வேண்டும். நல்ல கவிதை எழுதுபவர் வேறு. நல்ல கவிஞர் என்பவர் வேறு. பலரும் நல்ல கவிதை எழுதுபவரை அவசரப்பட்டு நல்ல கவிஞர் என்கிறார்கள். எனக்கு அதில் சம்மதமில்லை. காரணம் உணர்ச்சிப் பிழம்பாக வாழ்தலும் வாழ்வை ஒரு லாப நஷ்ட வியாபாரமாகப் பார்க்காது மனம் போன போக்கில் வாழ்தலும் நல்ல கவிஞரின் இலக்கணம். கணக்கு வழக்குகளில் மிக எச்சரிக்கையாக நடந்து கொண்டு வருமானம் முதலீட்டில் பாதுகாப்புகளைப் பலப்படுத்திக் கொண்டு சிறந்த கவிதைகளை வழங்குபவர் ஒரு கவிதை முதலாளி அல்லது கவிதைத் தயாரிப்பாளர் அல்லது கவிதை உற்பத்தியாளரே ஒழிய ஒரு போதும் நல்ல கவிஞர் என்கிற பெயரில் அவரை அடையாளப்படுத்த முடியாது.

என் கணக்கில் கம்பன், பாரதிக்குப் பிறகு கண்ணதாசன் நல்ல கவிஞர் ஆக முடியும். பாதுகாப்பாகவும் பக்குவமாகவும் பந்தாவாகவும் வாழும் கவிதை உற்பத்தியாளர்களில் ஒருவரும் அல்ல கண்ணதாசன். அவர் ஒரு கவிஞர். பாதுகாப்பாக வாழத் தெரியாதவர்.

மகாத்மா காந்தி என்கிற மிகப் பெரிய அரசியல் தலைவரைப் பயன்படுத்திக் கொள்ளும் பரபரப்போ. அந்தத் தலைவரின் சௌகர்யங்களுக்கேற்ப வளைந்து நெளிந்து உறவைத் தக்க வைத்துக் கொள்ளும்

அல்பத்தனங்களோ பாரதியிடம் கிடையாது. தாம் நடத்தும் விடுதலைக் கூட்டத்திற்குக் காந்தியை அழைத்த விதம். தடாலடியாக நுழைந்து அவர் மெத்தையில் அமர்ந்து கொண்ட கம்பீரம். காந்தி யோசனைப்படி மறுநாள் கூட்டத்தை மாற்றிக் கொள்ள மறுத்த உறுதி, அவரது லட்சியம் வெற்றி பெற ஆசிர்வதிக்கும் தெய்வீகம். இவை எல்லாம் தான் ஒரு மகாகவியின் கவிதா அணுக்கள். பாரதி நல்ல கவிதைகளும் எழுதிய நல்ல கவிஞர். பலர் நல்ல கவிதை எழுதுபவர்கள், ஆனால் நல்ல கவிஞர்கள் அல்லர்.

கண்ணதாசன் ஒரு ரெடிமேட் துணிக்கடைக்குள் நுழைகிறார். குழந்தைகளுக்கான ஆடை கேட்கிறார். என்ன சைஸ் என்று கடைக்காரர் கேட்டதும், சிறிது தடுமாறிவிட்டு, "எந்த சைஸில் வேண்டுமானாலும் தரலாம். காரணம் எனக்கு எல்லா சைஸிலும் பிள்ளைகள் இருக்கிறார்கள்!" என்று பதிலளித்தார். இதுதான் கவிஞரின் அடையாளம். இலட்சம் இலட்சமாகச் சம்பாதித்தாலும் ஐந்நூறுக்கும் ஆயிரத்திற்கும் அவர் அவஸ்தைப் படுவார். காரணம் அவர் நல்ல கவிஞர். மிகப் பிரமாதமாகத் திட்டமட்டு Calculation ஆக இருப்பவர்கள் மொழி நிர்வாகிகள். கவிஞர்களாக மாட்டார்கள்.

ஒரு முறை செல்லம்மா பாரதி வெளியூர் போயிருந்ததால் பாரதியும் பாரதிதாசனும் சேர்ந்து புதுச்சேரியில் பால்காய்ச்சிய சம்பவம் வேடிக்கையானது. விறகடுப்பைப் பற்ற வைகத்தத் தெரியாமல் ஏழெட்டுக் காகிதங்களைக் கிழித்து எரிய விட்டுப் பால்காய்ச்ச முயன்றனர். இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே என்று எழுதத் தெரிந்த கவிஞருக்குப் பால் காய்ச்சத் தெரியாது என்பது கவனிக்கப்பட வேண்டியது. வாழ்வில் வெற்றி வேறு. கவிதையல் வெற்றிவேறு. கவிஞனுக்கு வாழ்விக்கத் தெரியும். வாழத் தெரியுமா என்றால் தெரியாது.

கவி ரமணன் அறுபது வயது விழாவில் கவிஞருக்கு நான் சொன்ன இலக்கணம் இது.

"சாலைகளின்றி நடப்பவன் – அட
சரித்திரம் தானே படைப்பவன்
பாலையில் கூடப் பயிர்செய்து – அதைப்
பத்துப் பேருக்குக் கொடுப்பவன்!"

■


# மீண்டும் குழப்பம்

**சித்திரை வருஷம் பிறப்பு**

**சித்திரை 13, அல்லது 14 லண்டன் EASTHAM கோயிலில்**

**14ம் திகதி, மற்றக் கோயில்கள் 13**

**இது சைவ மக்களை முட்டாளாக்கும் நிலை அல்லவா.**

**இதற்கு நிரந்தர தீர்வு இல்லையா?**

## சைவ மக்களே கொஞ்சம் சிந்தியுங்கள் !

நுணாவிலூர் கா. விசயரத்தினம்
(இலண்டன்)

# தொல்காப்பிய மகளிர்




இடைச் சங்க காலத்தில் எழுந்த நூல்களில் 'தொல்காப்பியம்' என்ற நூலொன்றைத் தவிர மற்றைய அனைத்து நூல்களும் கடலன்னையுடன் சங்கமமாகியுள்ளன. எமக்குக் கிடைக்கும் நூல்களில் காலத்தால் மூத்த நூல் தொல்காப்பியம் ஆகும். இதைத் தொல்காப்பியர் (கி.மு.711) எனும் புலவர் யாத்தனர். இது ஓர் இலக்கிய, இலக்கண நூலாகும். "இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்று தொல்காப்பியம்" எனக் கூறுவர் நக்கீரனார். அவ்வாறே இன்றும் இந்நூல் விளங்கி வருகின்றது. 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' என்பானின் அரச அவையிலே அதங்கோட்டாசிரியரின் முன்பாக அந்நாளில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது எனப் பனம்பாரனாரின் பாயிரம் கூறுகின்றது. மேலும், 'தொல்காப்பியம் பண்டைத் தமிழர்களின் தொன்மையையும், நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம் பெருநூல்' என்பது டாக்டர் மு. வரதராசனாரின் கூற்றாகும். இனி மகளிர் பற்றித் தொல்காப்பியம் கூறுவதையும் காண்போம்.

### தெய்வ வழிபாடு

நிலம் என்பதை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்திணைகளாக வகுத்து, குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்கு மாயோன், மருதத்துக்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் ஆகிய ஆண் தெய்வங்களையும், பாலைக்கு மாத்திரம் கன்னி (துர்க்கை அல்லது கொற்றவை) என்னும் பெண் தெய்வத்தையும் வழிபடும் தெய்வங்களாக வகுத்துள்ளதையும் காண்கின்றோம். தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தெய்வ வழிபாடு நிலைத்திருந்ததைப் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்



வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."
(பொருள். 5)

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப." -
(பொருள்.1)

கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகிய ஏழையும் எழுதிணை என்பர்.

## ஐந்திணைகளில் மகளிர்

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களிலும் மகளிர் உலாவித் திரிந்து அவர்தம் உள்ளத்திலெழும் உணர்வெழுச்சிகளிற் பங்கேற்றுப் பரவசமடைவர். இதைத் தொல்காப்பியர் கூற்றில் காண்போம்.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே."
(பொருள். 16)

இவ்வண்ணம் அவர்கள் குறிஞ்சியில் புணர்தலும், பாலையில் பிரிதலும், முல்லையில் இருத்தலும், நெய்தலில் இரங்கலும், மருதத்தில் ஊடலும் ஆகிய வேறுபட்ட உணர்வுகளோடு வாழ்வியலை நடத்தி வெற்றியும் கண்டுள்ளனர்.

## கைக்கிளை

கைக்கிளை என்பது ஒருதலைக் காமமாகும். இதை ஒவ்வாக் காமம் என்றும் கூறுவர். கைக்கிளை புணராது நிகழும். இதைத் தொல்காப்பியம் இவ்வாறு கூறும்.

"காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்

தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே."
(பொருள். 53)

காமவுணர்ச்சி தோன்றாத இளையவளிடத்துப் பாதுகாவல் இல்லாதபொழுது அவளைத் துன்புறுமாறு பகழ்தலும், பழித்தலும் செய்து, தனக்கும் அவளுக்கும் பொருந்தக் கூடியவற்றைச் சேர்த்து, அவள் சொற்கேளாமல் தானே சொல்லி இன்பமடைதல், பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பாகும். இவ்வாறான துன்புறு செயல்கள் பல மகளிரைப் பாதிப்படையச் செய்கின்றன.

## பெருந்திணை

பெருந்திணை என்பது ஒருவனும், ஒருத்தியும் ஒருவர்க்கொருவர் அன்பின்றிக் கூடி வாழும் முறையாம். இதைப் பொருந்தாக் காமம் என்றும் கூறுவர். பெருந்திணை புணர்ந்த பின்னான நிகழ்வாகும்.

"ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடும் தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே."
(பொருள். 54)

ஆண்மகனுக்கே உரிய மடலேறுதல், இளமை நீங்கிய முதுமைக் காலத்திலும் ஆசை மிகுதியால் தம்முள் கூடி இன்பம் துய்த்தல், தெளிவு நிலையற்றுக் காமத்தின் கண் மிகுதிப்பட்டு நிற்றல், ஐந்திணையாகிய ஒத்த காமத்தில் மாறுபட்டு நிற்றல் ஆகிய நான்கும் பெருந்திணை எனத் தொல்காப்பியம் கூறும். முதற் கூறியது தவிர, மற்றைய மூன்றிலும் மகளிரும் பங்கேற்று நாணப்பட்டு ஒதுங்கி நிற்பர். மடலேறல் நற்செயலன்று. எனவே அது பெண்களுக்கு ஒதுக்கப்படவில்லை.

## களவியல்

மனிதன் என்றும் இன்பத்தையே நாடிச் செல்கின்றான். இதை அவன் அனுபவிக்கப் பெண்ணொருத்தி காத்திருப்பாள். தலைவன் தலைவியர் எதிர்ப்படும் பொழுது காதற்களவு நிகழும். இன்பம், பொருள், அறம் என்று கூறப்பட்ட அன்புடனிணைந்த ஐந்திணையான குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் நிகழும் களவியல் பற்றித் தொல்காப்பியம் பேசுகின்றது.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"
(பொருள். 891,2)

அச்சம், நாண், பேதைமை ஆகிய முக்குணங்களும் தலைவியருக்கு என்றும் முந்தி வந்து நிற்றல் அவர்களுக்குரிய பாதுகாப்பும், சிறப்பும் ஆகும். இதனால் அவர்கள் வேட்கையுற்ற பொழுதும் புணர்ச்சிக்கு இசையாது வரைந்தெடுப்பதில் நாட்டம் செலுத்தி நிற்பர்.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப."
(பொருள். 96)

தொல்காப்பியர் காலத்தில் மேற்காட்டிய முக்குணங்கள் இந்நாளில் மகளிர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்றாகி நாற்குணங்களாகவும், நாற்படையாகவும் நளவெண்பாவில் திகழ்வதைக் காண்கின்றோம்.

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு."
(பாடல். 39)

புணர்ச்சியில் தலைவி இயல்பு: இயற்கைப் புணர்ச்சியில் தலைவியின் இயல்புகள் பற்றித் தொல்காப்பியர் இவ்வாறு சூத்திரம் அமைத்துள்ளார்.

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப."
(பொருள். 97)

அடைய வேண்டுமென்ற பேராசையும், என்றும் நினைத்தலும், எண்ணம்

கிட்டாதெனில் உண்ணாது உடல் மெலிதலும், விழித்திருத்தலும், தானே கூறிக்கொள்வதும், நாணம் நீங்குதலும், காணும் பொருள் யாவும் முன்கண்ட பொருளென நினைத்தலும், அவையே நினைவாகப் பித்தாதலும், மயக்க முறுதலும், கைகூடாதவிடத்து இறந்து விடுதலும் ஆகியன தலைவிக்குரிய சிறப்பு வாய்ந்த களவெனக் கூறுவர்.

குறியிடம் கூடும் தலைவி: தலைவன், தலைவி ஆகிய இருவரிடையே நிகழும் களவொழுக்கத்தின் பொழுது தலைவனுக்குத் துணை நின்று உதவப் பாங்கன் அமைவதுபோல் தலைவிக்குத் தோழி அமைவாள். தலைவியின் தோழியாக இருப்பவள், செவிலியின் மகள் ஆவாள். தோழியின்றித் தலைவியானவள் தனித்து ஓர் இடமும் செல்லக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப்பாடு அன்றிருந்தது.

"தோழி தானே செவிலி மகளே."

(பொருள். 123)

தலைவன் தலைவியைக் கூடுவதற்கு முயலுங்கால் தலைவியின் உள்ளக் கருத்தினை அறிந்து, அவர்களைக் கூட்டுவித்தலும் தோழியிடம் உண்டெனத் தொல்காப்பியம் கூறும்.

"முயற்சிக் காலத்து அதற்பட நாடிப்
புணர்த்த லாற்றலும் அவள்வயி னான."

(பொருள். 127)

உயர்ந்த மறைப் பொருளை எடுத்துக் கூறும் ஆற்றல் செவிலித்தாய்க்கு உள்ளதால், அவளே தலைவிக்குத் தாயுமாகின்றாள் என்று தொல்காப்பியர் செப்புகின்றார்.

"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள் செவிலி யாகும்."

(பொருள். 122)

தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் உலாவுங்கால் குறியிடம் அமைத்துக் கூடுவர். பகலிற் கூடுமிடம் 'பகற்குறி' என்றும், இரவில் கூடுமிடம் 'இரவுக்குறி' என்றும் அழைப்பர்.

"குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்ற தென்ப."

(பொருள். 128)

தலைவியின் இல்லத்துக்கு அருகிலுள்ளதாகவும், வீட்டிலுள்ளோர் தலைவன் தலைவியர் பேசுவனவற்றைக் கேட்குமாறும் அமைந்த பகுதிதான் இரவுக்குறிக்குரிய இடமாகும்.

"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான."

(பொருள். 129)

மதிலின் புறத்தே அமைந்த பகுதிதான் பகற்குறிக்குரிய இடமாகும். அவ்விடம் தலைவிக்கு நன்கு அறிந்த இடமாக இருத்தல் வேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

"பகற்புணர் களனே புறனென மொழிப
ஆவளறி வுணர வருவழி யான."

(பொருள். 130)

தலைவனோடு கூடியபின்னர், அவன் விருப்புக்கு மாறுபட்டு நடத்தல் தலைவிக்குத் தருமமாகாமையால் அவன் விருப்பிற்கு இணங்கியும், தானும் செல்லக் கூடிய குறியிடம் கூறுதலே தலைவியின் செயலாகும். மேலும், தலைவன் தலைவியர் கூடலுக்குத் தோழி குறியிடம் குறித்தலும் உளவாம்.

"அவன்வரம்பு இறத்தல் அறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டு கிளவி கிழவிய தாகும்
தான்செலற் குரியவழி யாக லான."

(பொருள். 118)

"தோழியின் முடியும் இடனுமார் உண்டே."

(பொருள். 119)

தலைவியின் களவொழுக்கத்தை அவள் தந்தையும், உடன் பிறந்த தமையன்மாரும் உற்றுக் கண்காணித்து அவள் செயற்பாட்டினைக் குறிப்பால் அறிந்து கொள்வர்.

"தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப."

(பொருள். 135)

களவு வெளிப்படல்: தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும்

பொழுது களவு வெளிப்படுதலுமுண்டு. இது 'அம்பல்', 'அலர்' என இருவகையால் வெளிப்படும். அம்பல் என்பது சொல் நிகழா முகிழ்நிலைப் பரவாக் களவாகும். அலர் என்பது பேசப்படும் பரவிய களவாகும். இவ்விரண்டிற்கும் தலைவனே பொறுப்பாவான் என்று தொல்காப்பியம் கூறித் தலைவியைக் காப்பாற்றிக் கொள்கின்றது.

"அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவ னாகும்."
(பொருள். 137)

களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள காதலர்கள் களவு வெளிப்பட்ட பின்னரும், களவு வெளிப்படா முன்னரும் ஆகிய இரு நிலைகளிலும் தலைவியரைத் தலைவர் திருமணம் புரிந்து கொள்வரெனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இருவாற்றானும் வரைதல் அறத்தொடு பொருந்தும் என்றவாறு.

"வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே."
(பொருள். 138)

களவிற் கூற்று நிகழ்த்தற்குரியோர்: களவொழுக்கத்தில் இறங்கியுள்ள தலைவன் தலைவியருக்கு அறிவுரை கூறப் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, மிகுந்த சிறப்பினையுடைய தலைவன், தலைவி ஆகிய அறுவரை நியமித்துள்ளதைக் கூறும் தொல்காப்பியச் சூத்திரம் இதுவாகும். இவர்களில் தோழி, செவிலி, தலைவி ஆகிய மூவரும் பெண்பாலார் ஆவர்.

"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு
அளவியன் மரபின் அறுவகை யோரும்
களவியற் கிளவிக் குரியர் என்ப."
(பொருள். 490)

களவொழுக்கக் காலவரை : களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்குங்கால் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்திருக்கும் வழக்கம் இல்லை. அவர்கள் காதல் தெய்வீகமானது. அவ்வண்ணமே அன்றைய காதலர்கள் தூய சிந்தையுடன் செயற்பட்டனர். ஆனாலும் அவர்கள் மத்தியில் தோன்றிய களவின் காலவரையை இரண்டு மாதம்தான் நிகழுமென்று இறையனார் களவியலில் வரையறை கூறப்பட்டுள்ளது.

"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப."
(நூற்பா. 32)

தலைவியருக்கு ஒரு வழுவும் நிகழ்ந்துவிடக் கூடாதென்ற பேரெண்ணங்கொண்ட பழந்தமிழறிஞர் இவ்வாறான வரையறையை முன்கூட்டியே வகுத்துள்ளமை என்றென்றும் போற்றற்குரியதாகும்.

## கற்பியல்

கற்பு என்பது ஒழுக்கத்தின் இயல்பை உணர்த்துவது. கற்பின் வழி நின்று வாழ்க்கை நடாத்துவதையே யாவரும் விரும்புவர். பெண்ணானவள் கற்பைப் பேணிக் காத்து ஒழுக்கமாக இருக்கவேண்டியவள் என்று ஆண்கள் விரும்புவர். ஆனால் கற்பை இரு சாராரான ஆண்களும், பெண்களும் கடைப்பிடிக்க வேண்டியவர்களாவர். அன்றேல் அவர்கள் வாழ்க்கை சீரழிந்து விடும். 'ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி' என்ற தமிழன் கோட்பாடு அமைந்து விட்டால் மானிட வாழ்வியல் அன்பு மயமாகிவிடும்.

கற்பும் கரணமும்: தலைவன் தலைவியைக் கண்டு, காதல் அரும்பி, சிலநாட் பழகி, பல நாள் ஒதுங்கி, பின் அவளைக் கண்டதுமில்லைத் தொட்டதுமில்லை என்று பொய் கூறுதலும், குற்றப்பட ஒழுகுதலும் மக்கள் வாழ்க்கையைச் சீரழித்து விடுகின்றன. தலைவன் தலைவியரிடையில் பொய்யும், வழுவும் தோன்றிய பின்னர் ஆன்றோரும், சான்றோரும் (ஐயர்) கரணம் என்ற சடங்கொடு கூடிய மணநிகழ்வு முறைகளை வகுத்துள்ளனர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப."
(பொருள். 143)

சடங்கோடுகூடிய மணவிழாவில்

கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவன், கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவியைக் கொடுத்தற்குரிய தலைவியின் தமர் (பெற்றார் உற்றார்) மணஞ்செய்து கொடுக்கும் முறையைக் கற்பென்று சிறப்பித்துக் கூறுவர்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே." (பொருள். 140)

தலைவனும், தலைவியும் அன்பினால் இணைந்து தனிவழிப் பாலையில் சென்றவிடத்தும், கொடுத்தற்குரிய தலைவியின் தமர் இல்லாதவிடத்தும், சடங்கோடுகூடிய மணநிகழ்வு நடைபெறுதலும் உளதாம். இங்கே கரணத்தின் சிறப்பினைக் காண்கின்றோம்.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான."
(பொருள். 141)

கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோர்: பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருடன் சிறப்பினையுடைய பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி ஆகிய அறுவரையும் சேர்த்துப் பன்னிருவரும் கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோராவர். இவர்களில் விறலி, பரத்தை, தோழி, செவிலி, கிழத்தி ஆகிய ஐவரும் பெண்பாலார் ஆவர்.

"பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பில் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெடு மரபிற் கற்பிற் குரியர்."
(பொருள். 491)

களவிற் கூற்று நிகழ்தற்குரியோராக அறுவரையும், கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோராகப் பன்னிருவரையும் நியமித்துக் கற்புக்கு மிக முக்கியம் கொடுத்துள்ள சிறப்பினையும் காண்கின்றோம்

ஒருங்கு தவம் பயிலல்: தலைவனும் தலைவியும் இன்பம் துய்த்து, முதுமைக் காலத்தில் மீண்டும் சிற்றின்பத்தில் இறங்காது, பாதுகாப்புத் தரக்கூடிய தம் பிள்ளைகளுடனும், அறன் நாடுகின்ற உறவினருடனும் கூடி வாழ்ந்து கொண்டு, சிறந்த பேரின்பத்தைத் தரும் வழியிற் புகுதலே இப் பிறப்பின் பயனாகும் என்கின்றது தொல்காப்பியம்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் பிறந்ததன் பயனே."
(பொருள். 190)

## பரத்தையிற் பிரிவு

சமூக விரோதச் செயலான தம் உடம்பை ஆடவர்க்கு விற்கும் பெண்களைப் பரத்தையர் எனப் பழிப்பர். தலைவன் பரத்தையை நாடிச் சென்ற காலை தலைவி பூப்பெய்திய செய்தி கேட்டுத் தலைவியை நாடி முதல் மூன்று நாளும் அவள் சொற்கேட்டு, ஒழுகி நின்று, பிற்பட்ட பன்னிரண்டு நாளும் அவளைப் பிரியாது கூடி நிற்பான் என்று சொல்லுவர் புலவர். பரத்தையிற் பிரிவைத் தணிக்க இவ்வரையறை கூறப்பட்டுள்ளதெனலாம். இதைத் தொல்காப்பியச் சூத்திரம் இவ்வாறு கூறும்.

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான."
(பொருள். 185)

அக்காலத்தில் பரத்தையிற் பிரிவு நால்வர்க்கும் உரித்தே என்பதைக் கீழ் வரும் சூத்திரம் எடுத்துக் கூறுகின்றது. இங்கு நால்வர் என்பது:

*(1) அந்தணர் (2) அரசர் (3) வணிகர் (4) வேளாளர் ஆகிய நால்வகுப்பினராவர்.*

"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்."
(பொருள். 220)

கற்புடைய தலைவியானவள் தலைவனின் பரத்தையைப் புகழ்ந்து ஏத்திக் கூறினாளாயினும், அவள் உள்ளத்தில்

ஊடல் உண்டெனத் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.

"கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினும்
உள்ளத்து ஊடல் உண்டென மொழிப."
(பொருள். 229)

## உடன்கட்டையேறல்

ஒரு பெண்ணை வரைந்தெடுத்து, அவளுக்கு வாழ்வு கொடுத்து, அவளை வாழ்க்கைத் துணையாகக் கொண்டோன் இறந்துபட்டவிடத்து அவன் தலையோடு தன் முலைகளையும் முகத்தையும் சேர்த்துக் கொண்டு உடன் இறந்துபட்ட ஒரு பெண்ணின் பரிதாப நிலையைத் தொல்காப்பியத்தில் காண்கின்றோம். மேலும் பெரும் புகழினை நிலைநிறுத்தி இறந்துபட்டவனைச் சுற்றிக் கூடிய உறவினர்கள் அழுத மயக்கமும், மனைவியர் தத்தம் கணவரைக் கட்டிக்கொண்டு அழுததைக் கண்டோர் பொறுக்க முடியாத வருத்தமும் ஆகியவை வேறு தென்படும் காட்சிகளாம்.

"முலையும் முகனும் சேர்த்திக் கொண்டான்
தலையொடு முடிந்த நிலையொடு தொகை
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்"
(பொருள். 771621)

கணவனோடு இறந்துபட்ட மனைவியின் இறப்பைக் கண்டோர் பிறர்க்கு எடுத்துக் கூறிய 'மூதானந்தம்' என்ற நிலையைத் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டுகின்றார். மூதானந்தம் என்பது ஒன்றுபட்ட அன்பினால் வந்த சாக்காடு. இன்னும்,; கொடுமைமிக்க பாலைநில வழியில் தன் ஆருயிர்க் கணவனை இழந்து தனியளாய்த் தவித்து நின்று வருந்திப் புலம்பிய தலைவியின் 'முதுபாலை' நிலையையும் தொல்காப்பியம் சித்திரிக்கின்றது.

"கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந் தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்."
(பொருள். 772225)

தன் ஆருயிர்த் தலைவியை இழந்த தலைவன் தனித்துநின்று 'தபுதார' நிலையில் வாடுவதையும், தலைவன் இறந்துபட்ட விடத்துத் தலைவியானவள் உடன்கட்டையேறாது கைம்மைபூண்டு 'தாபத' நிலையில் வருந்தி வாழ்வதையும், தலைவனை இழந்த தலைவி 'பாலை' (புறங்காடு) நிலையில் நின்று உடன்கட்டையேறுவதையும் தொல்காப்பியம் காட்டுகின்றது.

காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நளியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும்."
(பொருள். 772831)

- மூதானந்தம் தலைவன் இறந்த பொழுதே தலைவியும் உடனுயிர் நீத்தல்.
- பாலை நிலை உடன்கட்டையேறல்.
- தாபத நிலை உடன்கட்டையேறாது கைம்மைபூண்டு வருந்தி வாழ்தல்.
- தபுதார நிலை தலைவியை இழந்த தலைவன் தனித்து வருந்தி வாழ்தல்.
- முதுபாலை கொடிய பாலைவன வழியில் தலைவனை இழந்து தனியளாய்த் தவித்து நிற்கும் தலைவியின் புலம்பல் நிலை.

தற்கால மகளிர் மூதானந்தம், பாலை நிலை ஆகியவற்றை ஒதுக்கி விட்டுத் தாபத நிலையில் நின்று கைம்மைபூண்ட வாழ்க்கை நடாத்தித் தம் பிள்ளைகளையும் குடும்பத்தையும் மேன்னிலையடையச் செய்வதில் ஈடுபட்டிருத்தலை நாம் மெய்யார வாழ்த்திப் பாராட்ட வேண்டும்.

■

நூல் விமர்சனம் **கா.மு.அன்சாரி**

# 'காலத்தை வென்ற காவிய மகளிர்'

## நூலாசிரியர் : நுணாவிலூர் கா. விசயரத்தினம்

இந்நூலில் சங்ககால இலக்கியங்களில் காணப்படும் காவியநாயகிகள் மற்றும் இதர கதாபாத்திரங்கள் பற்றியும், தமிழ் வளர்த்த பெண்பாற்புலவர்கள் பற்றியும், பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப்படும் பெண் பெருமை பற்றியும் விரிவாக, விளக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இருபெரும் இதிகாசங்களான மகாபாரதம், ராமாயணம் ஆகியவற்றுடன் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெரும் காப்பியங்களில் உலாவரும் பெண் பாத்திரங்கள் பற்றித்தான் அதிக அளவில் விபரிக்கப்பட்டிருக்கிறது. பதினொரு அத்தியாயங்களில் ஏழு அத்தியாயங்களை நூலாசிரியர் இதற்காக ஒதுக்கி இருக்கிறார். இந்தக்காப்பியங்கள் அனைத்தும் பல நூறு ஆண்டுகளாக நிலைத்து நின்று, காலத்தால் சாகாத இலக்கியங்களாக விளங்குகின்றன. அதனால்தான் இந்நூலுக்கு பொருத்தமான தலைப்பையும் நூலாசிரியர் கொடுத்துள்ளார். இத்தகைய நூலை உருவாக்குவதற்கு ஆழ்ந்த ஆராய்ச்சியும், கடின உழைப்பும், திடமான சங்கற்பமும் வேண்டும். இப்பணிக்காக நூலாசிரியரைப் பாராட்ட வேண்டும்.

நூலாசிரியர் தமது நூலில் ஒரு புதுவித உத்தியை செவ்வனே கையாண்டிருக்கிறார். அதுவே இந்நூலின் சிறப்பம்சமாக அமைந்திருக்கிறது. காவியங்களில் முக்கிய பங்கேற்கும் மகளிரைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்களது குணாம்சங்களையும், சந்தித்த சவால்களையும், அனுபவித்த துயரங்களையும், சம்பந்தப்பட்ட காப்பியக் கதைகளுடன் பொருத்திப் பிணைத்து கதைப்பின்னணியை சுவைபட சுருக்கமாக கூறியிருக்கிறார். இப்படிச் செய்வதன் மூலம் காப்பியக்கதைகளை சுருக்கமாகவேனும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிறார். இது பலவகைகளிலும் பயன் வளைவிக்கக்கூடியதாய் அமைந்திருக்கிறது. அனேகமானோர்க்கு காப்பியங்களின் பெயர்கள் தெரிந்திருந்தாலும், அவை கூறும் கதைகளையோ, அவற்றில் வரும் கதாபாத்திரங்களையோ அறிந்திருக்கமாட்டார்கள். அத்தகையோருக்கு நூலாசிரியர் வழங்கி இருக்கும் கதைச்சுருக்கம் பெரிதும் உதவும். சில இலக்கிய ஆர்வலர்க்கு, மூலநூல்களை படித்து முழுமையான கதைகளை நுகர வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் உந்துசக்தியாகவும் இருக்கும்.

நூலில் காணப்படும் காப்பியக்கதைகளை; படிக்கும்போது, சமூகம் சார்ந்த சில ஒழுக்க நெறிகள் பற்றிய சிந்தனைகள் தோன்றத்தான் செய்கின்றன. உதாரணமாக சிலப்பதிகாரக்கதையை படிக்கும் போது கற்புநெறி பற்றிய சிந்தனை தோன்றுகிறது. பெண்கற்பை வலியுறுத்தியது போல் ஆண்கற்பு வலியுறுத்தப்படாத நிலை அக்காலகட்டத்தில் இருந்ததை உணர்கிறோம். "ஒருத்திக்கு ஒருவன்" என்ற கொள்கை வலுவாக கடைப்பிடிக்கப்பட்டது போல் "ஒருத்தனுக்கு ஒருத்தி" என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை. அதனால்தான், "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே" என கண்ணகியின் அழகிலும், இளமை தரும் சுகத்திலும் கிறங்கிக்கிடந்த கோவலனுக்கு, மாதவியைக் கண்டு அவளது பேரழகில் மயங்கி அவளுடன் கூடிக்குலாவி வாழ்வதில் எந்த விதமான மனஉறுத்தலும் ஏற்படவில்லை. ஆடவர்க்கு, அதுவும் கோவலன் போன்ற செல்வந்தர்க்கு, இப்படி பிற மாதருடன் வாழ்வது அக்கால சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாகவும்

இருந்திருக்கலாம். பெண்களும் இதைப் பெரிதுபலித்தியதாகவும் தெரியவில்லை. கோவலன் மாதவியை விட்டுப்பிரிந்து, செல்வமெல்லாம் இழந்து, மீண்டும் கண்ணகியிடம் வந்த போது, அவள் அவனை வரவேற்று, "நகை முகம் காட்டிச் சிலம்பு உள கொண்மின்" என்றுதானே கூறினாள்! ஆக இது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக இருந்திருக்கலாம். இருந்தாலும் இதை, காப்பியத்தை யாத்த இளங்கோவடிகள் ஏற்றுக்கொண்டாரா? இலக்கியக்கர்த்தாக்களைப் பற்றி குறிப்பிடும்போது சிலம்புச்செல்வர் மா.பொ.சி பின்வருமாறு கூறுகிறார். "வரலாற்று சம்பவங்களும், கவிஞனின் கற்பனைகளும் கலந்துதான் காப்பியம் உருவாகின்றது. காப்பியப்புலவன் நடந்த சம்பவங்களை மட்டும் கூறும் சரித்திர ஆசிரியன் அல்லன். நடந்த சம்பவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, நடக்கவேண்டும் என்று தாம் விரும்பும் நல்ல எண்ணங்களையும் அவற்றோடு இணைத்துவிடும் லட்சியவாதி."

இளங்கோவடிகளும் இதைத்தான் செய்திருக்கிறார். சிலப்பதிகாரம் பெண்ணைப் பெருமைப்படுத்தி பேசும் பேரிலக்கியம். இதில் முதன்மையான கதாபாத்திரம் கண்ணகிதான். முடிவில் அவள் தெய்வமாகி விடுகிறாள். ஒழுக்கநெறி தவறிய கோவலனுக்கு தண்டனை வேறு ரூபத்தில் வருகிறது. செய்யாத குற்றத்துக்கு அவன் மரண தண்டனையை அனுபவிக்கிறான். இவ்வாறு, இளங்கோவடிகள் ஒழுக்கநெறி பற்றிய தம் நிலைப்பாட்டை உணர்த்தியிருக்கிறார். இத்தகைய நிலைமையை ராமாயணத்திலும் பார்க்கலாம். ஆண்கற்பு வலியுறுத்தப்படாத அக்காலத்தில் பலதாரமணம் பரவலாக இருந்தது. இராமனுடைய தந்தையான தசரதனுக்கு மூன்று மனைவியர் இருந்தனர். ஆனால், வால்மீகியும், கம்பரும் இராமனை ஏகபத்தினி விரதனாகத்தான் காட்டி இருக்கிறார்கள்.

நூலாசிரியர் விபரித்திருக்கும் காப்பியக் கதைகளைப் படிக்கும்போது அவற்றில் தொக்கி நிற்கும் மற்றுமோர் விடயத்தையும் நாம் காணமுடிகிறது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு மதக்கொள்கையை வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது. அப்படியானால், பண்டையத்தமிழகத்தில், எந்தவித மதப்பூசல்களுமில்லாத, மதநல்லிணக்கம் மலிந்த, அமைதியான சூழலில் மக்கள் வாழ்ந்திருந்தனர் என்றுதான் கொள்ளவேண்டும். நாமக்கல் கவிஞரும், கீழ்வரும் அவரது பாடல்கள் மூலம் இதை உறுதி செய்கிறார்.


'சைவமும் வைணமும் சமணமும் பவுத்தமும்
தழைத்தது செழித்தது தமிழ்நாட்டில்
வையகம் முழுவதும் வணங்கிடும் குணங்களை
வாழ்ந்தவர் உன்னுடை முன்னோர்கள்
உலகின் மதமெலாம் ஒவ்வொரு காலத்தில்
ஓடிப் புகுந்திந்தத் தமிழ் நாட்டில்
கலகம் சிறிதுமின்றிக் கட்டியணைத் தவற்றை
காத்து வளர்த்தவர்கள் தமிழ் நாட்டார்.'

இந்த நூலுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புக்கு பொருந்தாத சிலவிடயங்களும் நூலில் காணப்படுகிறது. தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல். காப்பியமல்ல. பெண்கள் சம்பந்தமாக சில சூத்திரங்களில் பேசப்பட்டாலும், காப்பிய மகளிரை இதில் காணமுடியாது. தமிழ்ப்பெண்ணினத்தின் அறிவுக்களஞ்சியம் எனப்போற்றப்படும் ஔவையார் மற்றும் ஏனைய பெண்பாற் புலவர்கள் அனைவரும் இலக்கிய கர்த்தாக்கள். அவர்களை காவிய மகளிர் என்ற வரையறைக்குள் அடக்க முடியுமா? நூலில் காணப்படும் கடைசி இரண்டு அத்தியாயங்களும் பொருந்தா நிலையில் தான் காணப்படுகின்றன.

இந்த நூல் கையடக்கமான சிறு நூலாக இருந்தாலும், அதன் உள்ளடக்கம் பல தகவல் அடங்கிய அறிவுப்பேழையாக இருக்கிறது. கணினி யுகமான இக்கால அவசர உலகில் வாழும் தமிழ்மக்களுக்கு, பண்டைத்தமிழ் காவியங்கள் பற்றி, மேலெழுந்தவாரியாகவேனும், அறிவதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

■

# வெங்காயத்தின் 50 மருத்துவ குணங்கள்




**வெ**ங்காயத்தை ஆனியன் என்று அழைக்கிறோம். இது யூனியோ என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியது. இதற்கு பெரிய முத்து என்று அர்த்தம்.

வெங்காயத்தின் காரத்தன்மைக்குக் காரணம் அதில் உள்ள அலைல் புரோப்பைல் டை சல்பைடு என்ற எண்ணெயாகும். இதுவே வெங்காயத்தின் நெடிக்கும், நமது கண்களில் பட்டு கண்ணீர் வரவும் காரணமாக இருக்கிறது. சிறிய வெங்காயம், பெல்லாரி வெங்காயம் இரண்டும் ஒரே தன்மையை உடையவை. ஒரே பலனைத்தான் தருகின்றன.

வெங்காயத்தில் புரதச்சத்துக்கள், தாது உப்புக்கள், வைட்டமின்கள் உள்ளன. எனவே நம் உடம்புக்கு இது ஊட்டச்சத்து தருகிறது.

பல நாடுகளில் வெங்காயத்தை மருந்துப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். நமது பாட்டி வைத்தியத்திலும், வெங்காயம் முக்கிய இடம் வகிக்கிறது. விஞ்



ஞானிகள் வெங்காயத்தின் மகிமையைப் பாராட்டுகிறார்கள்.

வெங்காயத்தை எப்படி பயன்படுத்தினால், என்ன பலன்கள் கிடைக்கும்?

1. நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட பித்தம் குறையும். பித்த ஏப்பம் மறையும்.

2. சம அளவு வெங்காயச் சாறு, வளர்பட்டை செடி இலைச் சாற்றை கலந்து காதில்விட காதுவலி குறையும்.

3. வெங்காயச்சாறு, கடுகு எண்ணெய் இரண்டையும் சம அளவில் எடுத்து சூடாக்கி இளம் சூட்டில் காதில்விட, காது இரைச்சல் மறையும்.

4. வெங்காயத்தை துண்டுகளாக நறுக்கி, சிறிது இலவம் பிசினைத்தூள் செய்து சேர்த்து, சிறிது கற்கண்டு தூளையும் எடுத்து, அனைத்தையும் பாலுடன் சேர்த்து சிறிது சாப்பிட எல்லா மூலக்கோளாறுகளும் நீங்கும்.

5. வெங்காய நெடி சில தலைவலிகளைக் குறைக்கும், வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட உஷ்ணத்தால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும்.

6. வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்து, பிசைந்து மீண்டும் லேசாக சுடவைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக்கட்ட கட்டிகள் உடனே பழுத்து உடையும்.

7. வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.

8. வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்ககாயச் சாறை பஞ்சில், நனைத்து பல் ஈறுகளில் தடவிவர பல்வலி, ஈறுவலி குறையும்.

9. வெங்காயத்தை சமைத்து உண்ண உடல் வெப்பநிலை சமநிலை ஆகும். மூலச்சூடு தணியும்.

10. வெங்காயத்தை அவித்து தேன், கற்கண்டு சேர்த்து சாப்பிட உடல் பலமாகும்.

11. வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

12. வெங்காயத்தை வதக்கி தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட ஆண்மை பெருகும்.

13. படை, தேமல் மேல் வெங்காயச் சாற்றை தடவினால் மறைந்துவிடும்.

14. திடீரென மூர்ச்சையானால் வெங்காயத்தை கசக்கி முகரவைத்தால் மூர்ச்சை தெளியும்.

15. வெங்காயச் சாற்றையும் தேனையும் கலந்து அல்லது வெங்காயச் சாற்றையும், குல்கந்தையும் சேர்த்து சாப்பிட்டால் சீதபேதி நிற்கும்.

16. வெங்காய ரசத்தை நீர் கலந்து குடிக்க நன்கு தூக்கம் வரும்.

17. பனைமர பதநீரோடு வெங்காயத்தை நறுக்கிப் போட்டு சூடுபடுத்தி குடித்துவர மேகநோய் நீங்கும்.

18. வெங்காயம், அவரை இலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து சாப்பிட மேகநோய் குறையும்.

19. வெங்காயம் குறைவான கொழுப்புச் சத்து உள்ளது. எனவே குண்டானவர்கள் தாராளமாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம்.

20. பச்சை வெங்காயம் நல்ல தூக்கத்தை தரும். பச்சை வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிடுவது நல்லது.

21. வெங்காயம் வயிற்றிலுள்ள சிறுகுடல் பாதையை சுத்தப்படுத்துகிறது. ஜீரணத்துக்கும் உதவுகிறது.

22. வெங்காயம் இரத்த அழுத்தத்தை குறைக்கும், இழந்த சக்தியை மீட்கும்.

23. தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் வெங்காயச் சாற்றை நாள் ஒன்றுக்கு அரை அவுன்ஸ் வீதம் மூன்றுவேளை சாப்பிட்டு வர நுரையீரல் சுத்தமாகும்.

24. வெங்காயச் சாற்றுடன், கடுகு எண்ணெய் கலந்து கீல் வாயு காரணமாக மூட்டுகளில் ஏற்படும் வலி நேரத்தில் தடவி வர வலி குணமாகும்.

25. நறுக்கிய வெங்காயத்தை முகப்பரு உள்ள இடத்தில் தேய்த்தால் முகப்பரு நீங்கும்.

26. வெங்காயச் சாற்றோடு சிறிது உப்பு கலந்து அடிக்கடி சாப்பிட்டுவர, மாலைக் கண் நோய் சரியாகும்.

27. வெங்காயச் சாறையும், தேனையும் சம அளவு கலந்து கண்வலிக்கு ஒரு சொட்டுவிட கண்வலி, கண்தளர்ச்சி நீங்கும்.

28. ஜலதோஷ நேரத்தில் வெங்காயத்தை முகர்ந்தால் பலன் கிட்டும்.

29. வெங்காயத்தை அரைத்து தொண்டையில் பற்றுப்போட ஏற்படும் தொண்டை வலி குறையும்.

30. பாம்பு கடித்துவிட்டால் நிறைய வெங்காயத்தைத் தின்னவேண்டும். இதனால் விஷம் இறங்கும்.

31. ஆறு வெங்காயத்தை ஐநூறு மில்லி நீரிலிட்டு, கலக்கிப் பருக சிறுநீர் கடுப்பு, எரிச்சல் நீங்கும்.


32. வெங்காயம், சோடா உப்பு இரண்டையும் சேர்த்து அரைத்து நாய் கடித்த இடத்தில் தடவி, வெங்காயச் சாறை குடிக்க நாய் விஷம் இறங்கும். பிறகு டாக்டரிடம் செல்லலாம்.

33. வெங்காயச் சாறோடு சர்க்கரை, சேர்த்துக்குடிக்க மூலநோய் குணமாகும்.



34. காலரா பரவியுள்ள இடத்தில் பச்சை வெங்காயத்தை மென்றுதின்ன காலரா தாக்காது.

35. ஒரு பிடி சோற்றுடன் சிறிது உப்பு,





நான்கு வெங்காயம் இவற்றை சேர்த்து அரைத்து, ஒரு வெற்றிலையில் வைத்து நகச்சுற்றுள்ள விரலில் காலை, மாலை வைத்துக்கட்ட நோய் குறையும்.

*36.* சிறிய வெங்காயத்தில் இன்சுலின் உள்ளது. நீரிழிவு நோயாளிகள் இதை அதிகமாகப் பயன்படுத்தலாம்.

*37.* தலையில் திட்டுத்திட்டாக முடி உதிர்ந்து வழுக்கை விழுந்திருந்தால் சிறு வெங்காயத்தை இரு துண்டாக நறுக்கி தேய்த்துவர முடிவளரும்.

*38.* காக்காய் வலிப்பு நோய் உள்ளவர்கள் தினசரி ஓர் அவுன்ஸ் வெங்காயச் சாறு சாப்பிட்டுவர வலிப்பு குறையும்.

*39.* வெங்காயத்தை தினமும் சாப்பிட்டுவர, டி.பி.நோய் குறையும்.

*40.* வெங்காயச் சாற்றோடு சர்க்கரை சேர்த்து சாப்பிட வாதநோய் குறையும்.

*41.* தேள்கொட்டிய இடத்தில் வெங்காயத்தை நசுக்கித் தேய்க்க விஷம் இறங்கும்.

*42.* ஸ்வெங்காயத்தை பசும் தயிருடன் சேர்த்து சாப்பிட்டுவர தாது பலமாகும்.

*43.* வெங்காயம் சாப்பிட தொண்டை கரகரப்பு நீங்கி குரல் வளமாகும்.

*44.* தினமும் மூன்று வெங்காயம் சாப்பிட்டுவர பெண்களுக்கு ஏற்படும் உதிரச் சிக்கல் நீங்கும்.

*45.* வெங்காயத்தை துண்டு துண்டாக நறுக்கி விளக்கெண்ணெயில் வதக்கி சாப்பிட, மலச்சிக்கல் குறையும்.

*46.* வெங்காயத்தை அரைத்து முன் நெற்றி, பக்கவாட்டு நெற்றியில் பற்றுப்போட தலைவலி குறையும்.

*47.* மாரடைப்பு நோயாளிகள், ரத்தநாள கொழுப்பு உள்ளவர்கள் சின்ன வெங்காயம் சாப்பிடுவது நல்லது.

*48.* சின்ன வெங்காயச் சாறு கொழுப்பை உடனே கரைக்கும்.

*49.* வெங்காயத்தை ஒரு மண்டலம் தொடர்ந்து சாப்பிட்டுவர உடல் குளிர்ச்சியும், மூளை பலமும் உண்டாகும்.

*50.* வெங்காயத்தை வதக்கிக் கொடுத்தால் பிள்ளைகள் விரும்பி சாப்பிடுவர், ஊட்டச்சத்து கிடைக்கும். ■

# பத்திப் பாடல்களும்
## முத்திப் பாடல்களும்

தற்பொழுதெல்லாம் கோயில்களிலும் வேறு வழிபாட்டு இடங்களிலும் பத்திப்பாடல்களே பாடப்படுகின்றன. திருமுறை பாடுவது அருகி வருகிறது. திருமுறைகளின் பெருமையை அறியாமை, திருமுறையை அறியாமை என்பவை இதற்குக் காரணமாகலாம்.

பத்திப்பாடல்கள் பல யாரால் எழுதப்பட்டவை என்ற விவரமே தெரியவில்லை. ஒரு கவிஞர் எழுத, ஓர் இசையமைப்பாளர் மெட்டமைக்க, ஒரு கலைஞர் பாடி ஒலிப்பதிவு செய்ய அவை பிரபலம் அடைந்து விடுகின்றன. கேட்கக் காதுக்குச் சுவை தருவதன்றி அவற்றால் ஆன்மிகப் பயன் உண்டா என்பது கேள்விக்குறி. ‘உள்ளமெனும் கோயிலிலே உறைகின்றாய்’, ‘மருதமலை மாமணியே’ போன்ற பாடல்கள் இந்தப் பத்திப் பாடல்களுக்கு உதாரணம்.

முத்திப் பாடல்கள் என்பவை அப்படியல்ல. அவற்றை இறையனுபவம் பெற்ற அருளாளர்கள் அருளினர். மறைகளின் பொருளே அருளாளர்களாற் திருமுறைகளாக்கப்பட்டது. அப்படித்தான் கற்றுணர்ந்தோர் சொல்கிறார்கள். அதனால், கோயில்களிலும், வீட்டு வழிபாடுகளிலும், கூட்டு வழிபாடுகளிலும் அவை ஓதத்தக்கவை ஆகின்றன. ஓதுவதால் பயனும் கிடைக்கும்.

பத்திப் பாடல் பாடினாலும் அன்புடன் பாடினால் பயன் உண்டுதானே என்பவரும் உளர். நமக்கு ஒரு நோய் வந்தால் நாம் தகுதியுள்ள ஒரு மருத்துவரிடமே போவோம். அந்த நோய் பற்றி நன்கு படித்த, அனுபவமுள்ள மருத்துவரையே நாடுவோம். நன்கு பரிசோதித்த மருந்தையே உட்கொள்வோம். சாதாரண மருந்தை உட்கொள்வதில்லை. உடல் நோய்க்கே இவ்வளவு கவனம் செலுத்துகிறோம் என்றால், நம் ஆன்ம ஈடேற்றத்துக்கு எவ்வளவு சிந்திக்கவேண்டும். சிந்திக்கிறோமா?

இருபத்தியேழு அருளாளர்கள் அருளிய பதினெட்டாயிரத்து முன்னூற்று இருபத்தாறு அருட் பாடல்கள் இருக்கின்றன. அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி இருக்கிறது. அருணகிரியார் அருளிய திருப்புகழ் இருக்கிறது. இவற்றை நாம் பத்தியுடன் ஓதுவதால் அந்த அருளாளர் அடைந்த அநுபவத்தில் சிறிதளவாவது நமக்குக் கிடைக்க வாய்ப்பு உண்டல்லவா? பத்திப் பாடல் என்ற பெயரிலே பலதையும் பாடுவது அவ்வளவு பலன் தருமா? சிந்திக்கவேண்டும்.

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பா காகும்
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்.

க.ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்

நன்றி கலசம் சித்திரை வைகாசி ஆனி 2016 இதழ்



# இன்பமே எந்நாளும் துன்பமில்லை


இறைவனின் திருவடி நிழலிலே இருப்பதால் தமக்கு எவ்விதத் துன்பமும் இல்லை என்கிறார் நாவுக்கரசர். நாமார்க்கும் குடியல்லோம் என்று தொடங்கும் ஆறாந்திருமுறைப் பதிகத்தில் 'சேவடியினையே குறுகினோம்' என்பதால் வாழ்வில் இன்பமே, எந்நாளும் துன்பமில்லை என்று பாடுகிறார். அருளாளர்களுக்கு, இறையுணர்வு பெற்றவர்களுக்கு அது சாலும். சந்தேகம் இல்லை. நம்போன்ற சாதாரண மக்களுக்கு எந்நாளும் துன்பமில்லா வாழ்க்கை சாத்தியமா? ஆம் என்கிறது ஒரு பாடல்.

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது

நாலடியார் 74

அறிவது அறிந்து, அடங்கி, அஞ்சுவது அஞ்சி, உறுவது உலகு உவப்பச் செய்து, பெறுவதனால், இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும் துன்புறார். துன்புற்று வாழ்தல் அரிதென்று அறுதியிட்டுக் கூறுகிறது இப்பாடல்.

கற்க வேண்டியவைகளை முதலிலே ஐயம் திரிபறக் கற்கவேண்டும். பின்னர் அக்கல்வி வழி ஒழுகவேண்டும். கல்வி ஒருவர்க்கு முக்கியாமானது என்பதை எண்ணிலா அறநூல்கள் எடுத்தியம்புகின்றன.



அறநூல்களைக் கற்பவன், அதன் பயனால், எந்தச் சூழலிலும் கோபம்வராமல் காத்து அடங்கி நடப்பானாயின் அறக்கடவுள் அவனைக் காணவெனச் சமயம் பார்த்திருக்கும். கல்வி கற்று, அடக்கமுடையவனாகி, தீமைகளைக் கண்டு அஞ்சவேண்டியது அடுத்த நிலை. பிறர்க்குத் தீமை செய்யாது வாழ்தல் சாலச் சிறந்தது. அழுக்காறு, பேராசை, கோபம் போன்ற குணங்களால் கட்டுண்டவர்கள் பிறர்க்குத் தீமை செய்யத் தயங்கமாட்டார்கள். கற்றுணர்ந்தவர்கள் கனவிலும் மற்றையோர்க்குத் தீங்கு விளைக்க விழையார்கள்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்

அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு

குறள் 214

பிறருக்குத் துன்பம் தருஞ் செயல்களை மறந்துங்கூட நாம் நினைத்துவிடக்கூடாது. அப்படி நினைப்போமானால் அறக்கடவுள் நமக்குத் துன்பந்தரும் செயல்களை நினைக்கும் என்பர் வள்ளுவர்.

கல்வியை ஒழுங்காக, முறையாகக் கற்றக வேண்டும். கற்றபின் அதன்படி ஒழுகவேண்டும். அதைத் தொடர்ந்து அடக்கமாக இருக்கவேண்டும். மற்றையவரிடத்தில் அன்பு செலுத்தவேண்டும். அவர்களுக்கு எவ்வித தீங்கும் இளைக்கக்கூடாது. தன்னால் இயன்றதைத் தன் தகுதிக்கு ஏற்ப உலகுக்கு உதவவேண்டும். அதனால், ஈட்டும் செல்வம் விலை மதிப்பற்றது. அப்படிப் பொருளை ஈட்டிய ஒருவனின் வாழ்க்கையில் இன்பமே நிறைந்திருக்கும். துன்பம் அவனை அணுகாது. இன்பமே, எந்நாளும் துன்பமில்லை.

கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக

குறள் 401

என வள்ளுவரும் கல்வியை வற்புறுத்தியிருக்கிறார். அப்படிக் கற்பவர்களுக்கு அடுத்து வரவேண்டியது அடக்கம். கல்வியால் அகந்தை வரக்கூடாது. அறிவது அறிந்து அடங்கி என்ற தொடர் இதையே குறிப்பிடுகின்றது. அடக்கம் ஒருவரைப் பெரியவராக்கும். அடக்கத்தை ஒரு செல்வமாக எண்ணிப் பாதுகாக்க வேண்டும். பணிவு கொள்பவனை உலகம் வணங்கும்.

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி

அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து

குறள் 1310

# மகிழ்ச்சி அளிக்கும்

## ஆனந்தமான பயணம்

தமிழ் நாட்டுக்கு வரும்போது

சிறந்த வாகன சேவையை உங்களுக்கு

தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.



தொடர்புக்கு :

**செல்வா**

தொலைபேசி எண்:



**9788059977, 9444175825**



பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தமிழகத்திலிருந்து உங்களுக்குத் தேவையான புத்தகங்களை

ஒரு கிழமையில் பெற்றுத் தருவோம்

எங்களிடம் தற்சமயம் உள்ள புத்தகங்கள்

1. அபிராமி, அந்தாதி - கிவா. ஜகந்நாதன் உரையுடன்
2. அதிஷ்ட விஞ்ஞானம் - சேதுராமன்
3. கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

10 பாகங்களுக்கு ஒரே புத்தகம்.

தொடர்புக்கு:

**தமிழர் தகவல்,**

**லண்டன்.**

# ஆன்மிகவாதிகளுக்கு


## அரிய சந்தர்ப்பம்

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?

### திருவிழா – சுற்றுலா



ஆடிமாதம் 5ம் திகதி புறப்பட்டு ஆடி 15ம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - ஆடி 10 திகதி ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் ஆனி உத்தரம் தேர் திருவிழாவும் - ஆனி உத்தரம் நடராஜனின் அபிஷேகமும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், திருவண்ணாமலை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



தொடர்புகளுக்கு

**World Travel & Tour**

**020 84659888**

**020 84659666**













லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA




நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

ANJAPPAR
Chettinad Indian Restaurant

ANJAPPAR CATERING



Menu

HIGH CLASS INDIAN VEGETARIAN AND NON VEGETARIAN TAKE AWAY

JUST EAT

020 7438 20 23 - 0742 1763 516

www.anjappartakeaway.co.uk

admin@anjappartakeaway.co.uk

229, HIGH STREET NORTH, EAST HAM, E6 2JG | LONDON

Follow Us on

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

# கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்




இப்பொழுது விற்பனையில்...



36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA




நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்











லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA










நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்




சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி,
ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்.
கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு.
திருநெல்வேலி - வண்ணார்பேட்டை, வடக்கு ரத வீதீ, திருநெல்வேலி டவுண்.
பெங்களூரு - ஒரையன் மால்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

# OPENING SOON

# FOOD WORLD

Asian - European - English - Indian - Sri Lankan
Afro Caribbean - Polish - Afghani - Albanian - Hungarian
Mauritian - Pakistani - Korean - Chnese - Turkish - Thai

- ✓ லண்டன் மாநகரில் முதல் முறையாக அதிபிரம்மாண்டமான முதல் தமிழ் சூப்பர் ஸ்டோர்
- ✓ உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்தும் இதுவரை எங்கும் கண்டிராத அதி விஷேட மலிவு விற்பனையில் இங்கு கிடைக்கும்.
- ✓ இங்கு 40க்கும் மேற்பட்ட இலவச கார் பார்க்கிங் வசதி உண்டு.

**Opening Times**

| Mon to Sat - 7am to 10pm | Sunday - 11am to 5pm |
|---|---|

**Tel : 0208 6400 511, foodworld.co.uk**


Lycamobile
Call the world for less
9p /min
Sri Lanka
Landline & Mobile
To activate : Text SAVE to 2525
UK PLAN 20
1000
National minutes
Unlimited
National SMS
2GB
Data
Unlimited
calls to Lycamobile UK
Only! £12 30 days
To activate: Dial *139*12044#
Order your free SIM at www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl
Customers should opt-in by texting SAVE to 2525 to be eligible to get the special rates. Customer who did not opt-in will be charged at standard rates. Opt-in save promotional tariff is valid from 25.02.2015. Customers with India 1p/min promotion ( top up offer) should not opt-in to this special rates. If you opt-in to the promotion, you will not be able to avail India special rates.Promotional tariff valid for 30days from the Opt-in. Lycamobile reserve the right to amend or vary the terms of this promotion, or to withdraw this plan at any time on reasonable notice. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01, 02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. In bundle data usage is rounded up and charged in 1KB increments. Once the data allowance of a bundle has been fully used, additional data usage will be charged at standard rate. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with the policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid from 09.06.2015.
Lyca mobile
Call the world for less